Registered as a News paper
பக்கங்கள் 10
விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு
மக்கள் நாளிதழ்
Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 மாசி 05 17.02.2005 வியாழக்கிழமை ஓசை 251

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

### பேபி 81 குழந்தை விவகாரம் முடிவுக்கு வந்தது

## ஆனந்தக் கண்ணீர் சொரிய அபிலாசை தாய் ஜெனிற்றா பொறுப்பேற்றார்



(காரைதீவு நிருபர், மௌலானா)

குழந்தையின் தாயார் ஜெனிற்றா ஜெயராஜாவும் தந்தை ஜெயராஜாவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

4 மாதங்கள் முடிவடைந்து ஐந்தாவது மாதத்திற்குள் காலடி வைக்கும் பேபி 81 என்ற குழந்தையை, நீதிமன்றப் பதிவாளர் திரு.எம்.எஸ். எம்.நசீர் அவர்கள், கல்முனை வைத்தியசாலையிலிருந்து வந்திருந்த டாக்டர் கோபால் முகுந்தனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மாவட்ட நீதிவான் திரு.எம்.பி.மொஹிதீன், 22 பக்கங்கள் கொண்ட இறுதித் தீர்ப்பை வாசித்த பின்னர், குழந்தையைப் பெற்றோரிடம் வைபவ ரீதியாக ஒப்படைத்தார்.

ஏராளமான ஊடகவியலாளர்கள் நிறைந்திருந்த அவ்விடத்தில், ஆனந்தக் கண்ணீருடன் பெற்றோர் பேபி 81ஐப் பொறுப்பேற்று, அபிலாஷ் என்று பெயரிட்டனர்.

குழந்தை கையில் கிடைத்ததிலிருந்து பல ஆயிரம் முத்தங்களை அதன் தாயார் குழந்தைக்கு வழங்கினார். குழந்தையின் பாட்டியார் கண்ணீர்விட்டு அழுதனர். தந்தை ஜெயராஜ் பலதடவை வைத்தியருக்கு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## அப்பலோ வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் பத்மநாதன் எம்.பி

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் கடுமையாகச் சுகயீனமுற்று கொழும்பு அப்பலோ வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் சுனாமி பேரலைக்குப் பின்பு சுகயீனமுற்று நீண்ட நாட்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமாகியிருந்தார்.

எனினும் திடீரென நேற்று சுகயீனமுற்ற இவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## கொக்கட்டிச்சோலையிலிருந்து நேற்று தமிழ்ச்செல்வன் குழு சம்பூர் பயணம்

### தளபதி பானு வழியனுப்பினார் தளபதி சொர்ணம் வரவேற்றார்

(நமது நிருபர்)

மட்டு-அம்பாறை மாவட்டங்களின் அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யனின் வித்துடல் விதைக்கப்பட்ட நிகழ்வில் பங்கேற்பதற்காக மட்டக்களப்புக்கு வருகைதந்த தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்று திருகோணமலைக்கு சென்றுள்ளனர்.

அவருடன் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி மற்றும் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் ஆகியோரும் அங்கு சென்றுள்ளனர்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# அலுவலக உதவியாளர் மீது டக்ளஸ் தேவானந்தா தாக்குதல்

## ஜனநாயக வரம்பை மீறியதாக கூறி இன்று மனு கையளிப்பு

(நமது நிருபர்)

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அமைச்சில் பணியாற்றும் செயலரின் காரியாலய உதவியாளரை தாக்கியதாக அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தமிழ் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இத்தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக அமைச்சின் ஊழியர்கள் ஆட்சேபம் ஒன்றை அமைச்சின் செயலாளரிடம் இன்று கையளிக்கவுள்ளனர். இதில் அமைச்சில் பணியாற்றும் நூறுபேரின் கையொப்பங்களை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அச்செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சில் பணியாற்றும் யு ஜி பந்துல எனப்படும் ஊழியரை அவருக்கே தெரியாத காரணம் கூறப்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## திருக்கோவில் படை முகாம் முன்பாக நிவாரணம் வழங்கல்; மக்கள் விசனம்

(சர்வேஸ்வரன்)

திருக்கோவில் பிரதேச விசேட அதிரடிப்படை முகாம் முன்பாக நிவாரணப் பொருட்கள் வழங்குவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

படையினரின் இந்நடவடிக்கையினால் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம்வரை நடந்து வந்து நிவாரணம் பெறுவதாக தெரிவிக்கும் மக்கள் வீதியில் வைத்து நிவாரணப் பொருட்களை பெறுவதற்கு நாங்கள் பிச்சை எடுப்பவர்கள் அல்ல எனவும் இது மக்களை கேவலப்படுத்தும் செயல் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

### இன்றைய நாளில்

**அனு குண்டின் தந்தை
றொபட் ஒப்பன் ஹெய்மர்
22.04.1904-18.02.1967**



அனுகுண்டின் தந்தை ஒப்பன் ஹெய்மர் 16.07.1945 நியூ மெக்சிக்கோவில் உள்ள பாலைவனம் ஒன்றில் முதல் முறையாக அனு குண்டு பரிசோதனை செய்தார்.

## மட்.அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை பெரும் பாதிப்பு

(எஸ்.ரவீந்திரன்)

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பின்பு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படுவான்கரைப் பிரதேசத்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## ஜனாதிபதி மட்டு வருகிறார் அரசியல் இலாபமென்கிறார் ஜெயா

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்க எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

இதன் போது அவர் சுனாமி பேரலைத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்த வீடமைப்புத் திட்டமானது திராய்மடு, வட்டமடு, காத்தான்குடி, ஒல்லிக்குளம் பகுதிகளிலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி தாக்கத்தினால் 40 ஆயிரத்து

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## படுவான்கரைப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின்றி பாதிப்பு

(டிமலேஸ்)

கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலயத்தில் நீண்ட நாட்களாக ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இது மாணவர்களின் ஆங்கிலப் பாட பின்னடைவிற்கு காரணமாக அமைவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. இது தொடர்பாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பவளகாந்தன் அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்ட போது இவ்வலயத்தில் 151 ஆங்கில ஆசிரியர் தேவையுள்ளது தற்போது 49 ஆங்கில ஆசிரியர்களே உள்ளதாகக் குறிப்பிட்டார். இதனால் அனேகமான பாடசாலைகளில் இதேநிலை காணப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற தமிழ் மொழி மூல ஆசிரியர் தெரிவில் நியமனம் பெறும் ஆங்கில ஆசிரியர்களைக் கொண்டு இவ்வாறு தேவையுள்ள பாடசாலைகளின் வெற்றிடங்களை ஓரளவு பூர்த்தி செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## செய்தித் துளிகள்

### விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

(நமது நிருபர்)

கடற் பேரலை அனர்த்தத்தை தொடர்ந்து தற்போது மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகி பாடசாலை கற்றல் கற்பித்தல் தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் வழமை போல் நடைபெற ஆரம்பித்துள்ளன.

அந்த வகையில் துணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டு சம்மந்தமான நிகழ்வுகளும் தற்போது பாடசாலை மட்டங்களில் நடைபெறத் தொடங்கியுள்ளன.

பாடசாலை வேளைகளில் காலை நேரத்தில் மாணவர்கள் உடற்கல்விப் பயிற்சிகளில் ஈடுபடுவதையும் தங்களைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காகத் தயார் படுத்திக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளதுடன் ,மாணவர்கள் தமது மனச் சுமைகளை மறந்து முற்றாக மகிழ்ச்சி எனும் ஓர் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது.

### சட்ட விரோதம்.

(நமது நிருபர்)

அமைச்சர் ரோகித போகொல்லாகமவை ஐ.தே.க. கட்சியிலிருந்து நீக்கியது சட்ட விரோதம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீரப்பளித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.க. வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரான இவர் நவம்பர் மாதம் ஆளும் கட்சியில் இணைந்து அமைச்சரானார். இவரை கட்சியிலிருந்து ஐ.தே.க. நீக்கியதையடுத்து நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழக்கும் ஆபத்து ஏற்பட்டது.

இதனை செல்லுபடியற்றதாக்கக் கோரி குறிப்பிட்ட அமைச்சர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் எவ்வித விளக்கமும் கோராமல் இவரை நீக்கியது செல்லுபடியற்றது என தீர்ப்பளித்துள்ளது. இதனையடுத்து இவரது நாடாளுமன்ற அங்கத்துவம் தற்போது பாதுகாக்கப்பட்டுள்ளது.

### கல்முனைக்கு விஜயம்.

(அஸ்லம் எஸ்.மௌலானா)

துருக்கி நாட்டின் சர்வதேச செம்பிறைச் சங்கத்தின் உயர் மட்டக் குழுவொன்று கடந்த 12.02.2005 சனிக்கிழமை கல்முனைப் பகுதிக்கு விஜயம் செய்தது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மயோன் முஸ்தபாவை அவரது கல்முனை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய இக் குழுவினர் இப்பகுதியின் தேச விபரங்கள் பற்றி கேட்டறிந்து கொண்டனர்.

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மயோன் முஸ்தபா எம்.பி இம் மக்களுக்கு உடனடியாகச் செய்து கொடுக்கப்பட வேண்டிய உதவிகள் குறித்தும் விபரித்தார்.

புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் கல்முனை கரையோர மாவட்டப் பகுதிகளை அரசு புறக்கணித்து வருகின்றது. எனச் சுட்டிக்காட்டிய முஸ்தபா எம்.பி. வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதி அடைந்திருக்கின்ற மக்களுக்கு வீட்டு வசதிகளை அவசரமாகச் செய்து கொடுக்க வேண்டிய தன் அவசியத்தை துருக்கி தூதுக்குழுவினரிடம் வலியுறுத்தினார்.

மயோன் முஸ்தபாவுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஆழிப் பேரலையால் பேரழிவுற்ற மருதமுனை அக்பர் கிராமம், மசூர் மௌலானா வீட்டுத் திட்டம், பாண்டிருப்பு, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிக்கைக்காடு போன்ற இடங்களை இக்குழுவினர் பார்வையிட்டனர்.

# கல்முனையில் காணி ஒதுக்கினால் குவைத் முன்னூறு வீடுகளை நிர்மாணிக்கும்

(அஸ்லம் எஸ். மௌலானா)

சுனாமி அனர்த்தத்தினால் பேரழிவுற்றிருக்கின்ற கல்முனைப் பிரதேசத்தில் அரசாங்கம் காணிகளை ஒதுக்கித்தருமானால் உடனடியாக முன்னூறு வீடுகள் நிர்மாணித்துத் தரப்படும் என குவைத் நாட்டின் செம்பிறைச் சங்கத்தின் பிரதி முகாமையாளர் அப்துர் ரஹ்மான் உறுதியளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வுறுதி மொழியை வழங்கினார்.

குவைத் நாட்டிலிருந்து வருகை தந்த உயர் மட்டத் தூதுக்குழுவினர் கல்முனைப் பகுதியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்ட பின்னர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவரின் பாரியார் மதுர்யா-அல் சனூஸீ, செம்பிறைச் சங்கப் பிரதி முகாமையாளர் அப்துர் ரஹ்மான் ஆகியோரும் தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுடன் முன்னாள் அமைச்சரும், குவைத் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவருமான ஏ.ஆர். மன்சூர், கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார், திட்டமிடல் அதிகாரி எம். அன்வர்தீன் ஆகியோரும் பாதிக்கப்பட்ட மக்களுடன் கல்முனைப் பிரதேசத்தின் புனரமைப்பு குறித்து கலந்துரையாடினர்.

இங்கு அப்துர் ரஹ்மான் மேலும் கூறியதாவது ஆழிப்பேரலையால் பேரழிவடைந்துள்ள கல்முனைப் பிரதேசத்திற்கு பல்வேறு வகையிலும் நாம் உதவ முன்வந்துள்ளோம். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கும் தயாராக இருக்கிறோம்.

குவைத் அரசும், தொழில் நிறுவனங்களும், கொடை வள்ளல்களும் இலங்கையில் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே பல நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர். இன்னும் கணிசமானளவு நிதி சேகரிக்கப்படுகிறது.

இந்நிதியின் மூலம் கல்முனையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இனமதபாகுபாடின்றி புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். குறிப்பாக இப்பகுதியில் முன்னூறு வீடுகளை அமைப்பதற்கு ஆலோசித்து வருகிறோம். அரசாங்கம் காணிகளை ஒதுக்கித் தருமானால் உடனடியாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். முன்னாள் தூதுவர் ஏ.ஆர். மன்சூரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுடனேயே கல்முனைப் பிரதேசத்தில் எமது உதவித் திட்டங்களை மேற்கொள்ள விரும்புகின்றோம். அதற்கு பிரதமரும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குவைத் பிரதிநிதி அப்துர் ரஹ்மான் குறிப்பிட்டார். குவைத் தூதுக்குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களையும் வழங்கினர். இங்கு பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சி னைகள், தேவைகள் குறித்து முன்னாள் அமை ச்சர் மன்சூர் குவைத் குழுவினரிடம் விபரித்துக் கூறினார். இவர்களின் கல்முனை விஜயத்திற்கு அனுசரணை வழங்கிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் நன்றியும் தெரிவித்தார். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வருகின்ற உதவி, ஒத்தாசைகளுக்காக குவைத் அரசு மற்றும் நிறுவனங்களுக்கும் மன்சூர் நன்றி கூறினார்.

## சாய்ந்தமருதுக்கு தனியான வைத்திய அதிகாரி அலுவலகம்

(அஸ்லம்.எஸ் மௌலானா)

சாய்ந்தமருது பிரதெச செயலகப் பிரிவுக்கென தனியான வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கான அனுமதியை வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

இப்புதிய வைத்தியஅதிகாரி அலுவலகம் சாய்ந்தமருது மாவடி வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் தஸ்மீமா பாஸீர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இது கல்முனை மாநகரப் பிரிவில் அமையப் பெற்ற மூன்றாவது பிரதேச சுகாதார அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது. இது வரை காலமும் இப் பகுதி முஸ்லிம்களுக்காக கல்முனை தெற்கு எனும் பெயரிலும் தமிழர்களுக்கான கல்முனை வடக்கு எனும் பெயரிலும் ஒரு சுகாதார வைத்திய 'அதிகாரி அலுவலகங்கள் இயங்கி வந்தன.

கல்முனை தெற்கு சுகாதார அலுவலகம் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை நிர்வாகக் கட்டடத் தொகுதியில் இயங்கி வந்தது. எனினும் சுனாமி அனர்த்தம் காரணமாக வைத்தியசாலையுடன் இவ்வலுவலகமும், மருந்துப் பொருட்கள் களஞ்சியசாலையும் அழிந்து விட்டன.

இப்போது கல்முனை தெற்கு அலுவலகம், மாநகர சபைக் கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றது. இதன் வைத்திய அதிகாரியாக டாக்டர் சஹீலா இஸ்ஸதீன் கடமையாற்றி வருகிறார்.

கல்முனை தெற்கு சுகாதார அலுவலக நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகையை அடிப்படையாயக் கொண்டு தனியான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

# கௌசல்யன், மாமனிதர் சந்திரநேரு படுகொலையை பெண்கள் பண்பாட்டு மையம் கண்டிக்கிறது.

(நமது நிருபர்)

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட அறுவர் படுகொலையை பெண்கள் பண்பாட்டு மையம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களின் சாவுக்காய் எங்களது அஞ்சலிகளை ஆத்மார்த்தமாய் செலுத்துகின்றோம்.

இந்தப் படுகொலைகளுக்குள் சிங்கள இனவாதத்தின் இன்னொரு குரூர முகத்தைக் கண்டு கொண்டோம்.

தமிழ் மக்களை வாழவிடாமல் தடுக்கும் சிங்கள இனவாதத்தின் ஒரு தொடர் முயற்சிதான் இது. என யாழ் பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. படுகொலைகளை யார் செய்தனர் என்பதையும் தாண்டி இது தமிழ் மக்களை பலவீனப்படுத்த, அச்சமூட்ட, எடுக்கப்பட்ட இன்னொரு நடவடிக்கை என்பதே எமது கருத்து. சர்வதேச சமூகமும் சிங்கள இனவாதத்தின் இந்தக் குரூரத் தன்மையைப் புரிந்து கொள்ளும் என்று நம்புகின்றோம்.

கடல்கோள் (சுனாமி) அனர்த்தத்தின் போதும் கூட தமிழ் மக்களை ஓரங்கட்டி ஒதுக்கித்தள்ளும் சிங்கள இனவாதத்தின் மனித நாகரிகமற்ற கோர முகத்தை நாம் கண்டோம். ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் வடகிழக்கு மக்களை சந்திக்கக் கூடாது என்பதில் குறியாய் இருந்து தமிழர் தாயகத்திற்கான அவரது வருகையைத் தடுத்த அரசு இயந்திரத்தின் கபட கைங்கரியங்கள் இந்தக் குரூரத்தை முழு உலகுக்கும் பறைசாற்றும். இன்று அதே ஐ.நா பொதுச் செயலர் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார். அதை நாம் வரவேற்கிறோம்.

அவசரகாலச் சட்டங்களை அமுல்படுத்த இருப்பதும் இராணுவத்திடம் அனர்த்த நிவாரணப் பணிக்கான நிர்வாகத்தை கையளிக்க முயற்சிப்பதும் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் காட்டப்படும் இழுபறி நிலையும் தமிழ் மக்கள் தமக்கான அலுவல்களை தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத் தேவையை எமக்கு மேலும் வலியுறுத்துகின்றது.

இந்த நிலையில் தான் இன்னும் எங்கள் தேசத்து மக்களின் வாழ்வியலை மேலும் பலவீனப்படுத்த வென்று எமது பாசத்துக்குரிய விடுதலைப் போராளிகள் மீது இவ்வாறானதொரு படுகொலைச் சம்பவம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

சிறிலங்கா அரசின் இனவாதக் தன்மை எமது சந்ததிக்கு தெரியுவரத் தெரியவர நாங்கள் எங்கள் தேசத்தின் விடுதலையைத் தீர்மானிக்கும் விடுதலைப் போராட்டத்தில் மேலும் மேலும் திடமாகக் கால் பதித்து முன்னேறுவோம்.

நாங்கள் ஆண்களும், பெண்களும் எல்லோருமாய் இணைந்து நின்று எங்கள் தேசியத் தலைமையின் வழிப்படுத்தலின் கீழ் தொடர்ந்து முன் செல்வோம்.

எங்களது நிலைப்பாட்டை தென் இலங்கையும் சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எங்களது வேண்டுதல்.

## நன்றி தெரிவிப்பு.

(நமது நிருபர்)

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடத்தப்பட்ட இலச்சார்ட்சனை மற்றும் விசேட பூசைக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கு ஆலய பரிபாலன சபை நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமக்கு உதவியோருக்கு நன்றிகூறி கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

# அடுத்த இரு மாதங்களில் அரசியலில் பெரும் மாற்றம்.

**-ஹக்கீம் ஆரூடம்.-**



(நமது நிருபர்)

இலங்கையின் தேசிய அரசியலில் அடுத்த ஓரிரு மாதங்களில் சில மாற்றங்கள் ஏற்படும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் ஆரூடம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை சம்மாந்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,தமது கட்சி இந்த வருடத்தை தேர்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாகவும், நடைபெறவிருக்கும் எந்தவொரு தேர்தலுக்கும் முகம்கொடுக்க தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எந்த நேரத்தில் என்ன முடிவு எடுப்பார் என்று எவராலும் ஊகிக்க முடியாது. தற்போதய பிரதமரை பதவி நீக்கம் செய்து விட்டு புதிய பிரதமரை நியமிப்பார் அதன் பின்பு நாடாளுமன்றம் கலைக்கப் படலாம். இதுதான் இன்றைய அரசியல் நிலை. முஸ்லிம்களைப் பொறுத்த வரை ரணில் விக்கிரமசிங்க என்றாலும் சரி சந்திரிகா குமாரதுங்க என்றாலும் சரி இரண்டும் ஒன்று தான் என்றும் கூறினார்.

# மட்டக்களப்பு போக்குவரத்துச் சபை பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

(அ.நிஷாந்தன்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் முக்கிய கோரிக்கைகளை முன் வைத்துக் கடந்த சில தினங்களாக ஆங்காங்கே போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

அதன் அடிப்படையில் நேற்று மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பஸ் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நேற்று பெரும் சிரமங்களை எதிர் கொண் டனர்.

மேற்படி 2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் சகல அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவதாக அறிவிக்கப்பட்டும் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு இதுவரை எதுவித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் கடந்த ஓர் ஆண்டு காலம் வரை சம்பள உயர்வு வழங்கப்பட்டு வந்த போதும் சென்ற மார்கழி மாதம் முதல் இது நிறுத்தப்பட்டுள்ளது.

மத்திய போக்குவரத்துச் சபைக்கும், கொத்தனி பஸ் கம்பனி ஊழியர்களுக்குமான சம தொழில் பதவிபுரிவோருக்கிடையே 850 ரூபா வித்தியாசம் உள்ளதாகவும் இவற்றையும் சமமாக' வழங்கப்பட வேண்டும் என்றும்,

மட்டக்களப்புப் போக்குவரத்துச் சபையில் தற்போது பாவனையில் உள்ள நேர அட்டவணைப்படி பஸ் சேவைக்கு விடுவதற்கு 58 பஸ்கள் தேவையாக உள்ள போதும் இதுவரை 38 பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் மீதியாக இன்னும் 22 பஸ்கள் வேண்டும். ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே மேற்படி வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது பிரதேச மக்கள் சென்ற காலங்களில் போருக்கும் அதனைத் தொடர்ந்து சுனாமி அனர்த்துக்கும் முகம் கொடுத்து பல இன்னல்களை அனுபவித்தவர்கள்.

எனவே அவர்கள் இனிவரும் காலங்களிலும் போக்குவரத்துத்துறை சம்பந்தமாகவும், கஸ்டப்படக் கூடாது என்பதனையும் கருத்திற் கொண்டே இவ்வாறான வேலை நிறுத்தப் போராட்டங்களுடன் பலனைப் பெற எதிர் பார்க்கின்றோம். என்று மட்டக்களப்பு பஸ் போக்குவரத்து முகாமையாளர் மனோகரன் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

# மருதமுனையிலுள்ள நாற்பது குடும்பங்களுக்கு கூடாரம்!

(பி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள மருதமுனையிலுள்ள 40 குடும்பங்களுக்கு மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பு கூடாரங்களை அமைத்து தங்குவதற்கு வசதி செய்து கொடுத்துள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு குளியலறை, மலசல கூடம், சமையலறை, வெளிச்சவசதி என்பன செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு சுற்றி வரை வேலிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 30 நீர்த்தாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்களுக்கு குசினித்தளபாடங்கள், மண்ணெண்ணெய் அடுப்புகள், தரை விரிப்பு, கட்டில் விரிப்பு, போர்வைகள் என்பனவும் ஒழுங்காக வழங்கப்பட்டுள்ளது.

மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் முக்கியஸ்தரான மௌலவி எம்.எல்.முபாறக் ஸலபியின் நெறிப்படுத்தலில் இவ்வேலைத் திட்டங்கள் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைத் திட்டங்களுக்கு சவூதிஅரேபிய அரசாங்கத்தின் உதவியுடன் பறகஹதெனிய அன்ஸாரிஸ் ஸுன்னத்துல் முஹம்மதிய்யா அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற சிறார்களின் மன நிலையில் மாற்றம் வேண்டும்

## தென் கிழக்கு பல்கலைக்கழக பிரிவுத் தலைவர் நவாஸ்

(பி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களின் மன நிலையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகத் தான் "சைல்ட் பெஸ்ற்" என்ற இந்த சிறார்களுக்கான பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறு தெரிவித்தார் "சைல்ட் பெஸ்ற்" பாடசாலையின் ஸ்தாபகத் தலைவரும் தென் கிழக்குப் பல்க லைக்கழக ஆங்கில மொழி கற்பிக்கும் பிரிவுத் தலைவருமான ஏ.எம்.எம். நவாஸ்

2004.12.26ல் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதமுனைப் பிரதேசத்து சிறார்களின் நன்மை கருதி "சைல்ட் பெஸ்ற்" என்ற பெயரில் மருதமுனை மக்காமாடி வீதியில் சிறார்களுக்கான பாடசாலையொன்று சமீபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்று கையிலேயே இப்பாடசாலையின் ஸ்தாபகத் தலைவர் ஏ.எம்.எம்.நவாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் மனங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சிறார்களில் பலர் இன்னும் அனர்த்தப் பயம் நீங்காத நிலையில் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சிறார்களுக்கு கல்வி, விளையாட்டு என்பவற்றின் மூலமே சிறார்களின் மனங்களில் மாற்றங்களைக் கொண்டு வர முடியும். எதிர் காலத்தில் இவர்களின் சிறப்பான கல்வியையும் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்க முடியும் என்பதற்காகத்தான் சைல்ட் பெஸ்ற் என்ற இப்பாடசாலையை ஆரம்பித்திருக்கிறேன்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள உள ரீதியான சில பாதிப்புக்களை மெது மெதுவாகக் களைவதற்கு இவ்வாறான கல்விக் கூடங்கள் மூலம் கல்விமான்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம். ஜமால்தீன், ஓ.பெ. நூலகர் எம்.எல்.ஏ.எம். மஜீத், மௌலவி எம்.எல். முபாறன், ஏ.எம். ஜெமீல் உட்பட பெருந் தொகையான கல்விமான்கள் கலந்து கொண்டனர்.

இப்பாடசாலையில் முதற்கட்டமாக 30 சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான புத்தகங்கள், புத்தகப் பைகள், எழுது கருவிகள், தண்ணீர்ப் போத்தல்கள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

இச் சிறார்களிடமிருந்து எந்தவித நிதியும் அறவிடப்படமாட்டாது எனவும் "சைல்ட் பெஸ்ற்" பாடசாலையின் ஸ்தாபகத் தலைவர் ஏ.எம்.எம்.நவாஸ் அறிவித்துள்ளார்.

# வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு ஐயாயிரம் பாதணிகள்

(பி.எம்.எம்.ஏ.காதர்)

கொழும்பு களனிய றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென் மாகாணம், மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கின்ற தரம் 1 தொடக்கம் 13 வரையான 5000 சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு பாதணிகள், பாடசாலை உபகரணங்கள், எழுது கருவிகள், அப்பியாசக் கொப்பிகள், புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டு வருகிறது.

கனடா நாட்டைச் சேர்ந்த கரன்டியாங்க் என்பவரும் அவரது புதல்வரான றக்கிபேண்ட் என்பவரும் இணைந்து இலங்கை நாணயப்படி 45 இலட்சம் ரூபாவை வழங்கியதாக கல்முனை றோட்டரிக் கழகத்தின் தலைவி டாக்டர் புஷ்பலதா தெரிவித்தார்.

களனிய றோட்டரிக் கழகத்துடன் இணைந்து கல்முனை றோட்டரிக் கழகம் அம்பாறை, மட்டக்களப்பு, மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இந்த உபகரணங்களை வழங்குவதில் இணைந்து செயற்பட்டது. மருதமுனைப் பிரதேசத்திலுள்ள அல்ஹம்றா வித்தியாலயத்தில் 123 மாணவர்களுக்கும், ஷம்ஸ் மத்திய கல்லூரியில் 300 மாணவர்களுக்கும், அல் மனார் மத்திய கல்லூரியில் 225 மாணவர்களுக்குமாக மொத்தம் 648 பேருக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

# அரசின் அனர்த்த நிவாரணப் பகிர்வில் வாக்குக் கொடுத்ததற்கு மாறாகப் பங்கீடு

(யூ.எல்.எம்.பைஸர்)

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண முத்திரையில் 32 வாரங்களுக்கு ஒரு நபருக்கு ரூபா 375 வீதம் பொருட்கள் வழங்கப்படுமென முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தற்போது ஒற்றை இலக்கம் கொண்ட புள்ளிகள் வெட்டப்பட்டு அதற்கு 175 ரூபா பெறுமதியான பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும்.

அதில் 2800 கிராம் அரிசி அல்லது மாவும் 420 கிராம் பருப்பும் 210 கிராம் சீனியும் ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு வழங்கப்படும்.

இரட்டை இலக்கம் கொண்ட புள்ளிகள் வெட்டப்பட்டு அதற்கு ரூபா 200 வீதம் ஒரு வாரத்திற்கு ஒரு நபருக்கு வழங்கப்படும். இவ்விதம் வழங்கப்படுமிடத்து 04 மாதங்களுக்கு மாத்திரமே நிவாரணம் கிடைக்கும்.

அரசு ஏற்கனவே அறிவித்தது போன்று 06 மாதங்களுக்கு நிவாரணம் கிடைக்காது. இது பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகுமெனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# சிறையிருந்த ஆயுதக்குழு பொலநறுவைச் சிறைக்கு மாற்றம்

(நமது நிருபர்)

மொனராகலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவைச் சேர்ந்த 6 பேரும் நேற்று முன்தினம் மாலை பொலநறுவை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களுடன் நடமாடிய சமயம் கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் பாதுகாப்பின் நிமித்தம் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து குறிப்பிட்ட சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

மொனராகலை சிறைச்சாலையிலிருந்த சமயம் இவர்களில் நான்கு பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர்.

இவர்கள் ஆறு பேரும் பொலநறுவை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதையடுத்து அந்த சிறைச்சாலையிலுள்ள இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் நபர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

# தௌஹீத் ஜமாஅத் அமைப்பால் 46 விதவைகளுக்கு நிதி உதவி

(பி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த மருதமுனைப் பிரதேசத்து விதவைகள் 46 பேருக்கு நிதி உதவியும் உலர் உணவுப் பொருட்களும் சமீபத்தில் மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பால் வழங்கப்பட்டது.

மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் முக்கியஸ்தரான மௌலவி எம்.எல்.முபாறக் சலபி ஒவ்வொரு விதவைக்கும் தலா 2000 ரூபா ரொக்கப் பணமும் 1000 ரூபாவுக்கான உலர் உணவுப் பொதிகளும் விதவைகளின் பிரதி நிதிகளிடம் வழங்கினார்.

இதற்கான அனுசரணையை பாலமுனை ஜெஸ்கா நிறுவனம் வழங்கியதாக மௌலவி முபாறக் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பு செய்து வருகின்றது. மருதமுனை அல் மனார் வீதியில் அல் மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவுக்கு முன்பாக இந்த அமைப்பின் காரியாலயம் இயங்கி வருகிறது.

இந்த அமைப்பின் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ விரும்புகின்ற தனவந்தர்கள், பொது ஸ்தாபனங்கள் 077 6513059 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ள முடியும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம்; 20ம் திகதி அடிக்கல்

(அ.நிஷாந்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ண நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதிகளில் நிரந்தரமான வீடுகளை அமைத்துக் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் வாகரைப் பிரதேசத்தின் வட்டவான் பகுதியிலும், கல்குடா பிரதேசத்தில் வட்டிலடிச் சேனைப் பகுதியிலும் மண்முனை வடக்கு பிரதேசத்தில் திராய்மடு போன்ற பகுதியிலும் காத்தான்குடி, களுவாஞ்சிகுடி போன்ற பிரதேசங்களிலும் நிரந்தரமான வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 20ம் திகதி இடம்பெற உள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வே. சண்முகம் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். இந்த வீட்டுத் திட்டத்தில் ஒரு வீடு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட உள்ளதாகவும், 13000 வீடுகள் கட்டப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது லேணியம் நிறுவனத்தால் அப்பியாசக் கொப்பிகள்

(யூ.எல்.எம்.பைஸர்)

ஆழிப் பேரலை காரணமாகக் கல்வி நிலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் பாடசாலைப் பைகள், எழுது கருவிகள், போன்றன சாய்ந்தமருது லேணியம் கல்வி நிறுவனத்தால் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டன.

கல்வி நிலை பாதிக்கப்பட்ட சுமார் 100 மாணவர்களுக்கு இலவச மேலதிக வகுப்புக்களும் மேற்படி கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படுவதாக அதன் பணிப்பாளர் ரீ.எம்.றிபாய் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

மேற்படி உதவிகள் தேவைப்படும் மாணவர்கள் லேணியம் கல்வி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# சந்திரிகா அரசு விடுதலைப்புலிகளை வலிந்து போருக்கு தள்ள முனைகிறது

## – செல்வம் அடைக்கலநாதன் எம்.பி–



(நமது நிருபர்)

போர்காலத்தைப் போன்றே சமாதானச்சூழலிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்காக உயிரிழப்புக்களை சந்தித்து வருகின்றனர், இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற கண்டனப்பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளை வலிந்து போருக்குள் தள்ளிவிடுவதன் நோக்கமாகவே கௌசல்யனின் படுகொலை அமைந்துள்ளது. தமிழ் மக்களினால் சமாதான முயற்சிகள் மூலம் நல்ல தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை இப்படுகொலை உணர்த்தியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக சிங்களப் பேரினவாத சக்திகளினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இன்றைய நிலையில் பலம் மிகுந்த தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் பாதுகாவலாக, சக்தியாக இருக்கும் நிலையில் தமிழ் மக்களை ஏமாற்றிவிட முடியாது. ஆழிப்பேரலைக்குப் பின்னர் சந்திரிகா அம்மையாருக்கு நல்ல காலம் தோன்றியுள்ளது. கிடைக்கின்ற உதவிகளெல்லாம் தென்னிலங்கையை வளப்படுத்துவதே நோக்கா கக் கொண்டு அரசு செயற்பட்டு வருகின்றது. ஆழிப்பேரலையில் பேரழிவைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு எதுவித உதவிகளும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது அரசு உதவிகள் செய்யாது தமிழ் மக்களைத் தொடர்ந்து புறக்கணிக்குமானால் தமிழீழ அரசு உருவாவதை யாரும் தடுக்க முடியாது.

தென்னிலங்கையில் குளறுபடிகள் செய்துவரும் ஜே.வி.பினரை சந்திரிகா தூக்கி எறியும் நிலைக்கு வந்துள்ளார். சமாதானச்சூழல் நிலவிய மூன்று ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் எந்தவித முன்னேற்றத்தையும் காணவில்லை, மாறாக உயிரிழப்புக்களையே சமாதானத்திற்காக விலையாகக் கொடுத்துள்ளார்கள்.

கருணா என்ற தேசத்துரோகியின் பேரில் சிறிலங்காப் படையினரும் புலனாய்வுத் துறையினரும் தென்தமிழ் ஈழத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் படுகொலைகளையும் செய்து வருகின்றது. இப்படுகொலைகலெல்லாம் விடுதலைப்புலிகளை போருக்குள் தள்ளும் சதிமுயற்சிதான்.

அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளெல்லாம் உலகநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குத்தான். தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்த நெருக்கடியான சூழலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை பலப்படுத்துவதை நோக்காகக்கொண்டு செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# காரைதீவில் அழிக்கப்பட்ட பாடசாலைகள் எங்கே அமையும்?

## கல்வி சமூகம் கேள்வி

(விரி.சகாதேவராஜா)

ஆழிப்பேரலையில் சிக்கி அழிக்கப்பட்ட காரைதீவு விபுலானந்த மத்தியக்கல்லூரி மற்றும் விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பன எங்கே அமையும் என்ற வினா கல்விச் சமூகத்தை தினமும் தட்டிக் கொண்டிருக்கின்றது. விபுலானந்த மத்தியக் கல்லூரி தற்போது இ.கி.மி. பெண்கள் பாடசாலையில் காலை, மாலை வகுப்புகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மேற்படி கல்லூரி கடற்கரையிலிருந்து நூறு மீற்றரில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு குழுவினர் இப்பாடசாலையை ஒரு கிலோமீற்றர் தெற்கே கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறுகின்றனர். மற்றுமொரு குழுவினர் காரைதீவின் மத்தியிலுள்ள பகுதியிலோ அல்லது கரைவாகுப் பகுதியிலே அமைக்க வேண்டும் எனக் கோரிவருகின்றனர்.

இதனிடையே, சேதமடைந்த மற்றப் பாடசாலையான விக்னேஸ்வரா வித்தியாலயத்தை மேற்காக உள்ள ஒரு காணியில் அமைக்கத் திட்டங்கள் இருந்தாலும், அக்காணியை பணம் கொடுத்துப் பெற ஏற்பாடுகள் இல்லை.

அந்தகல்விச் சமூக மும் அக்கறை காட்டுவது குறைவு என்று அதிபர் எஸ். மோகன் கவலை தெரிவிக்கிறார். மொத்தத்தில் அழிக்கப்பட்ட இரு பாடசாலைகளும் அதே இடத்தில் அமைவது சாலப்பொருத்தமாகும் என மற்றுமொரு குழுவினர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

# “கோமாரி, சின்ன உல்லை, பெரிய நீலாவணையில் 1800 நிரந்தர, 1600 தற்காலிக வீடுகளும் அமையும்”

## – வெள்ளியன்று அடிக்கல் நட கடற்றொழில் அமைச்சு முடிவு –

(விரி.சகாதேவராஜா)

ஆழிப்பேரலையில் வீடுகளை முற்றாக இழந்த கல்முனைக் கரையோரப் பிரதேச அகதிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரச காணிகளில் 18 ஆயிரம் நிரந்தர வீடுகளும், 16 ஆயிரம் தற்காலிக வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும். கோமாரி, சின்ன உல்லை, பெரியநீலாவணை ஆகிய 03 இடங்களில் இவை அமைக்கப்படும். இதற்கான அடிக்கல் நாளை வெள்ளிக்கிழமை நடப்படும். காணியமைச்சு சிபார்சு செய்யும் அரச காணிகளில் அதுவும் 100 மீற்றர் திட்டத்திற்கு அப்பால் இவ்வீட்டுத் திட்டம் அமையப் பெறவுள்ளது. தனியார் துறையினரும், சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களும் இத்திட்டத்திற்கு பெருமளவு ஒத்துழைப்பை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இதே வேளை காணி நீர்பாசன விவசாய அமைச்சர் அனுர குமார திஸாநாயக கடந்த புதனன்று அம்பாறை கச்சேரிக்கு விஜயம் செய்து வீடமைப்புப் பணியை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# நாவிதன்வெளி பிரதேச தமிழ் பாடசாலைகள் புறக்கணிப்பு

(சர்வேஸ்)

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளிப் பிரதேச சபைக்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் அரசினால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. அண்ணமலை சக்தி வித்தியாலயத்தில் 05ம் தரம் வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது.

இதில் 148 மாணவர்கள் கற்கின்ற இப்பாடசாலையில் அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்கள் மாத்திரமே கல்வி கற்பிக்கின்றார்கள். இதே போன்று வேப்பையடி வாணி வித்தியாலயத்தில் 09ம் தரம்வரை கற்பித்தல் நடவடிக்கை உள்ளது.

இப்பாடசாலையில் 350 மாணவர்களுக்கு அதிபர் உட்பட ஆறு ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். 11ம் குலனிப் பாடசாலையில் தரம் ஆறு வரைக்கும் கற்பிக்கப்படுகின்றது. இதில் 144 மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் இங்கு அதிபர் உட்பட 03 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர் என வீரமுனைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆதீஸ்வரன் மாஸ்ரர் தெரிவித்தார்.

இவர் கருத்துக் கூறுகையில் மேலும் இப்பாடசாலைகளில் தான் ஆசிரியர்கள் பற்றாக்குறைகள் நிலவுவதுடன் கட்டிடங்கள் போதுமானதாக இன்றிமரங்களில் நிழலில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். சில சமயங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகள் இப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்பிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய சமூகத்தினரின் கல்வி நடவடிக்கைகளுக்கு அனைத்து வசதிகளும் போதுமானதாக உள்ளது.

எமது தமிழ் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஏன் புறக்கணிக்கின்றார்கள் என்று தெரியவில்லையெனக் கூறினார்.

# அழிக்கப்பட்ட 65 பாடசாலைகளை நிருமாணிக்க உலக தரிசனம் தயார்

## கல்வி அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

(விரி. சகாதேவராஜா)

ஆழிப்பேரலையில் அழிக்கப்பட்ட பாடசாலைகளை நவீன வசதிகளுடன் மீள புனரமைக்க உலக தரிசன நிறுவனம் முன்வந்துள்ளது.

கல்வியமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் உலக தரிசன நிறுவனம் கைச்சாத்திட்டுள்ளது. 08 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்படவுள்ளது. கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடி மெல் உலக தரிசன நிறுவனம் இலங்கைக்கான தேசியத் தலைவர் யூக்வா லீ ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கம்பஹா,களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் 65 பாடசாலைகளை மீள நிருமாணிக்க இவ் ஒப்பந்தம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், கணனிப்பயிற்சி நிலையம், அழகியல் கூடம், மைதானம், வயல்வேலி, நீர், சுகாதாரத் திட்டம் என்பனவும் இருக்கும். வட கிழக்கில் 67 பாடசாலைகள் ஆழிப்பேரலையில் முற்றாக நிர் மூலமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை இடை விலகல்

(நமது நிருபர்)

பாடசாலைக் கல்வியைப் பூரணமாக பெற்றுக் கொள்ள முடியாத, பாடசாலைக் கல்வியை பல்வேறுபட்ட காரணங்களை் இடைவிடும் அளவு தற்போது அதிகரித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் முன்பிருந்த அளவைவிட இரு மடங்கு தற்போது மாணவர்களால் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் தமது பெற்றோரின் அரவணைப்பின் கீழ் இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# படுகொலை சம்பவங்களுக்கு சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும்

## கிளி.வெகுஜன ஒன்றியம் மனு

(நமது நிருபர்)

ஒரு அரசு தனது இறையாண்மைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு தானே பொறுப்பேற்க வேண்டும் என்கின்ற சர்வதேச நியமத்தை சிறிலங்கா அரசு புறந்தள்ளி விடுவதும் உதாசினப்படுத்துவதும் சமாதானத்தின் தோற்றுவாயைச் சாகடித்து விடும் என அஞ்சுகிறோம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியம் மாவட்ட கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று கிளிநொச்சியில் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணியை அடுத்து கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்த மனுவிலேயே ஒன்றியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாங்கள் அண்மையில் கிழக்கிலங்கையில் நடைபெற்ற படுகொலையைக் கண்டித்துத் தங்களுக்கு மனுஒன்றினைச் சமர்ப்பித்துள்ளோம். அதன் தொடர்ச்சியாக இன்று இம்மாவட்டத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் ஒன்று சேர்ந்து ஜனநாயக வழிமுறையிலான அரச எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினைக் கிளிநொச்சியில் நடத்தி அம்மக்களின் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாட்டை இம்மனுவினுடாகக் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் சமாதான வழிமுறைக்காலத்தில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக கடந்த 07.02.2005 இல் வெலிகந்த அரச பாதுகாப்புப் பிரதேசத்தில் வைத்துக் கௌசல்யன் உட்பட தமிழர் தரப்புப்பிரதிநிதிகள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னான போர் ஓய்வு காலங்களில் போர் நிறுத்த ஒப்பந்த விதியை மீறி இவ்வாறான படுகொலைச் சம்பவங்களும் யுத்த நிறுத்த மீறல்களும் சமாதான விரோதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற போதும்,

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சமபங்காளியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அரசு இதுவிடயத்தில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காததையிட்டு நாம் பலத்த ஏமாற்றமும், விசனமும் அடைந்திருக்கிறோம்.

ஒரு அரசு தனது இறையாண்மைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு தானே பொறுப்பேற்க வேண்டும் என்கின்ற சர்வதேச நியமத்தை தாங்கள் அறிவீர்கள். எனினும் இவ்விடயத்தை அரசு புறந்தள்ளிவிடுவதும் உதாசினப்படுத்துவதும் சமாதானத்தின் தோற்றுவாயைச் சாகடித்துவிடும் என அஞ்சுகிறோம்.

ஆழிப்பேரழிவினால் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பிரதேசம் பெரும் அழிவுகளைச் சந்தித்தபோது, அரசு மனிதாபிமான ரீதியிலேனும் எமது பிரச்சினைகளை அணுகாமல் மாற்றான் தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்கிற இச்சந்தர்ப்பத்தில், இவ்வாறான திட்டமிட்ட படுகொலைகளுக்கு திரைமறைவில் அரசு உடந்தையாக இருப்பதானது எமது மக்களின் வாழ்வியல் கனவுகளை சிதறடிக்கும் கபட நோக்கமாகவே நாம் உணர்கிறோம்.

நடைபெற்று முடிந்த படுகொலைகள் தொடர்பாக நேர்மையாக - காலந்தாழ்த்தாது - நீதியான -விசாரணைகளை மேற்கொள்ள தாங்களும் சர்வதேசமும் வழிசமைக்க வேண்டும்.

சமாதான வழிமுறைகள் முறிவடைந்து விடாமல், தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, பொறுமை காத்துக்கொண்டு அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடுகின்ற நிராயுதபாணிகளான போராளிகளினதும் பொது மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய ஒப்பந்தத்தின் பாற்பட்ட கடமையை நீங்கள் தொடரவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## நுளம்புகளின் அட்டகாசம்!

(நமது நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட தொடர் மழையைத் தொடர்ந்து பல பிரதேசங்களிலும் நீர் தேங்கி நின்ற போது அது வற்றத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக அதிகளவான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டது. தற்போது இரவு வேளைகளில் நிம்மதியாக உறங்க முடியாதிருக்கின்றது. பெருமளவு நுளம்புகளின் தாக்கத்தால் தற்போது பொது மக்களிடையே ஒரு வகையான தொற்று நோய் பரவிவருவதாகவும் அறிய முடிகிறது.

## இலக்கியச் சுடர்

# அகநானூற்றுப் பாடல்களில் தலைவியின் நிலை......!

**கன்னிமுத்து வெல்லபதியான்**

தமிழர் தம் பண்பாட்டில் காதலும், , வீரமும் இரு கண்கள். இந்த இரண்டையும் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல" உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டுவனவே சங்ககால இலக்கியங்கள். அந்த வகையிலே காதலைப்பற்றி எடுத்தியம்பும் நூல்களுக்குள் ஒன்றாகவும் , உயர்ந்ததாகவும் 'அகநானூறு' அமைவதனைக் காணலாம். இத்தகைய அகநானூற்றுப் பாடல்களில் தலைவன் ,



தலைவி, தோழி, செவிலித்தாய், எனவரும் பாத்திர வார்ப்புகளுள் தலைவி பிரதான இடத்தைப் பெறுகின்றாள். அவளின் நிலையை, உள்ளத்து உணர்வுகளை உயிர்த்துடிப்புள்ளதாக, உணர்ச்சிமிக்கதாக சங்கச் சான்றோர் தமது கைவண்ணத்தால் சிறந்த இலக்கியச் சிறப்புடையதாக உருவாக்கித் தந்துள்ளனர்.தலைவியின் நிலை உள்ளத்து உணர்வுகள் என்பன தலைவியின் கூற்றாக மாத்திரமின்றி தலைவன், தோழி, செவிலித்தாய் கூற்றுக்களாகவும் புலப்படுத்தப் பட்டுள்ளமை சிறப்பம்சம் எனலாம்.

"**வண்டு படத் ததைந்த கண்ணி ஒண்கழல்**" எனவரும் பாடலில் மாமூலனார் தலைவியின் நிலையை உள்ளத்து உணர்வுகளை அழகாகப் புலப்படுத்தி இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

தலைவி தோழிக்குக் கூறுவதாக அமையும் அப் பாடலில் அவளது பிரிவுத்துயர் பலவாறாக வெளிப்படுத்தப்படுகின்றது. தூரத்தே உள்ள நாட்டுக்குச் சென்று பொன்னாலான அணிகலனாகிய செல்வத்தைத் தலைவிக்குக் கொடுப்பதற்காக தலைவன் பிரிந்து செல்கின்றான். அவன் குறிப்பிட்டுச் சென்ற காலம் வந்ததும் கூட அவன் இன்னும் திரும்பி வரவேஇல்லை. இந்நிலையில் பல்வேறு மன உணர்வுகளுக்கும், மன ஏக்கங்களுக்கும்,. தாக்கங்களுக்கும் தலைவி உள்ளாகின்றாள்.

*'நெடுவேள் ஆவி'* மன்னனுடைய பொதினி மலையிலே நின்று தலைவன் "**சிறுவனானவன் அரக்கு மெழுகொடு சேர்ந்த சாணைக்கல் போல நாம் பிரிய மாட்டோம்**" என்று சொன்னவற்றை எல்லாம் மறந்து விட்டார் போலும் என்று ஏங்கித் தவிக்கின்றாள் தலைவி. ஏந்திழையாளின் அந்த ஏக்கத்தை,

"**சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய**
**கல்போற் பிரியலம் என்ற சொற்றாம்**
**மறந்தனர் கொல்லோ தோழி**"

என்னும் இந்த அடிகள் தாங்கி நிற்கக் காணலாம். இதனால் உடல், உளரீதியாக தலைவி பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றாள். மூங்கிலைப் போன்ற அவளது பெரிய தோள்களே நெகிழ்ச்சியடைந்தனவென்றால் அவளது ஏக்கத்தை சொல்லவேண்டுமா?

*'அரிபெய் சிலம்பி'* என்ற பாடலில் பரணர் உள்ளுறை உவமை வாயிலாகத் தலைவியின் நிலையினைத் தருகின்றார். தலைவி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. பரத்தையிடம் சென்று தங்கி மீண்ட தலைவனின் ஒழுக்கக் கேட்டை தலைவி துணிந்து நின்று கண்டிக்கின்றாள். அவளுக்கு ஆவேசம் பொங்குகின்றது. இது முறையா? நீதியா? தர்மமா? என்றவகையில் அவனை இகழ்கின்றாள், வெறுக்கின்றாள். தீச்சுடர் போல விளங்கும் அழகிய தாமரை மலர்களை உடைய நீர்வளம் நிரம்பிய வயல்களிலே துவாரத்தினை உடைய வெள்ளைக் கொடிகளை உளக்கிக்கொண்டு வாளை மீனை உண்ணும் கூரிய பற்களை உடைய நீர்நாய் பின்பு முட்களோடு கூடிய தண்டினை உடைய பிரப்பங்கொடியின் பழைய புதரிலே சென்று தங்கும். இது போன்றது தான் உனது செயலும் என்று சிறந்த இலக்கியச் சிறப்போடு உள்ளுறை உவமையாகத் தருகின்றார்-பரணர் இதனை பின்வரும் அடிகள் புலப்படுத்துவதனைக் காணலாம்.

"**சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து**
**அந்தூம் புவள்ளை ஆய்கொடி மயக்கி**
**வளை மேய்ந்த வள்ளெயிற்று நீர் நாய்**
**முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்**"

இதன் மூலம் தலைவியின் நிலை இலக்கியச் சிறப்போடு எடுத்துக் கூறப்பட்டிருப்பது நயக்கத்தக்கதாகும்.

*'ஈயற் புற்றத்து......*" என்னும் பாடலில் தலைவியின் நிலை பெருங்குன்றூர் கிழாரால் இலக்கிய ரசனையோடு அழகிய சொல்லோவியமாகத் தீட்டப்படுகின்றது. தலைவி தன் நிலையைத் தோழிக்குக் கூறுகின்றாள். தலைவியைச் சந்திப்பதற்கு தலைவன் இரகசியமாக வருகின்றான் அதை ஊரவர்களுக்குத் தெரியாதபடி மறைப்பதற்காகத் தலைவி பெரும் பிராயத்தனம் செய்கின்றாள். ஆனாலும் அது அம்பலமாகியே விடுகின்றது அதனால் அவள் அலர் தூற்றப்படுகின்றாள். இந்நிலையில் தலைவி வெட்கம், துக்கம், அவமானம் என்பவற்றிற்கு உள்ளாகின்றாள். இதனை,

"**வாழைஓங்கிய தாள்கண் அசும்பில்**
**படுகடுங்களிற்றின் வருத்தம்சொலியப்**
**பிடிபடி முறுக்கிய பெருமரப்பூசல்**
**விண்தோய் விடரகத்து**
**இயம்பும் அவர் நாட்டு**"

என்ற வரிகள் உள்ளுறை உவமையாக உணர்த்தி நிற்கின்றன.

அதே பாடலில் தலைவனது பிரிவுத் துயரினை தலைவி பொறுத்துக் கொள்பவளாகவும், தலைவனின் உண்மை நிலையினைச் சரியாகப் புரிந்து கொண்டவளாகவும் , அவன் மீது நல்லெண்ணம் கொண்டவளாகவும் இருப்பதனைக் காணமுடி கின்றது. தன்னைக் கலக்கம் அடையச் செய்யும் நோக்கம் தலைவனுக்கு இல்லை என்றும் அவனது பிரிவுத்துயர் தவிர்க்க முடியாதது என்றும் மனஆறுதல் அடைகின்றாள்.

"**ஈயற் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த**
**குரும்பி வல்சிப் பெருங்கைஏற்றைத்**
**தூங்குதோல் துதிய வள்உகிரகதுவலின்**
**பாம்பு மதன் அழியும்**
**பானாட் கங்குலம்**"

என்ற அடிகள் அதனைப் படம் பிடித்துக் காட்டி நிற்கக் காணலாம்.

' *அனி நிலை பெறாஅ.........* என்ற பெருங்கடுங்கோவின் பாடலில் தலைவனின் கூற்றாகத் தலைவியின் நிலை புலப்படுத்தப் படுகின்றது. தலைவன் பயணம் செய்வதை பொறுக்க முடியாமல் மாறுபட்ட முகத் தோற்றத்துடன் தலைவியானவள் தலைவன் அருகில் இருக்கும் போது கூட தனித்தவள் போல இருந்தாள். ' காதலித்தவரைப் பிரிதல் அறநெறிப்பட்டதன்று' என்னும் பழமையான மொழி வெறும் சொல்லளவிலேதான் என்பதனை தன் முகக்குறிப்பாலும் முகத்தேற்றத்தாலும் காட்டினாள். பிரகாசமான அவளது முகமும், கண்களும் பொலிவிழக்கின்றன. கண்கள் கடலாகின்றன. தலைவன் சூடியிருந்த செழுங்கழுநீர் மாலையை அவள் மோர்ந்து பெருமூச்சு விட்டபோது அதில் உள்ள மலர்கள் பவளம் போன்ற தமது உருவத்தையே இழந்து விடுகின்றனர்

இந்நிலையில் தலைவன் தனது பயணத்தைத் தவிர்த்துக் கொள்கின்றான். ' ஒளிபொருந்திய ஆபரணத்தை உடைய இவள் நாம் அருகே இருந்த போது இப்படி வாடினாள் என்றால் நாம் பிரிந்தோமானால் பிழைத்திருக்க மாட்டாளே' என்ற தலைவனின் வரிகள் மூலம் தலைவி தலைவன் மீது கொண்ட ஆழ்ந்த அன்பையும், அழியாக் காதலையும், பிரிவென்பதை இம்மிளவும் பொறுத்துக் கொள்ளாதவளாகவும் இருப்பதைக் காணமுடியும் . இதனை

"**ஒண்தொடி உழையம் ஆகவும்**
**இணைவோள்பிழையவள் மாதோ! பிரிதும**
**நாம் எனினே**"

என்ற அடிகளில் கண்டுணர முடியும்.

*'கோழிலை வாழை .....* எனவரும் பாடலில் கபிலர் தோழி கூற்றாக தலைவியின் நிலையைத் தருகின்றார். தோழிதலைவனுக்கு கூறுவதாகப் பாடல் அமைகின்றது. தலைவன் மீது கொண்ட அளவற்ற காதலால் உடல், உளரீதியாக தலைவி பெரிதும் பாதிக்கப்படுகின்றாள். தலைவனைச் சிறிது நேரமாவது மறந்திருக்க முடியாத நிலை, தலைவனைப் பற்றிய நினைவுகளே நெஞ்சில் நிழலாடுதல், அதனால் மிகுந்த அழகான மூங்கில் போன்ற பெரிய தோள்களை உடைய தலைவி உருக்குலைந்து போதல், பகலில் மட்டும் வந்துவிட்டு இரவில் தலைவன் வராது விடுவதால் தலைவி எதிர்பார்த்த இன்பத்தை அடையமுடியாது போதல் போன்ற பரிதாப நிலைகளை இங்கே காணமுடிகின்றது. அந்த நிலைகளை...........

"**வெறுத்த வேஎர் வேய்புரைப்**
**பணைத்தோள்**
**நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின் மாட்டு**
**இவளும் இணையள்...**"

என்ற அடிகள் புலப்படுத்தி நிற்கக் காணலாம்.

" *வான் கடற் பரப்பில் ...'* என்ற பாடலில் அம் மூவனார் தோழியின் கூற்றாக தலைவியின் நிலையினை நயம்படத் தருகின்றார். தோழி தலைவனுக்குக் கூறுவதாகப் பாடல் அமைகின்றது. தொண்டி என்னும் துறைமுகப் பட்டினத்தைப் போன்று சிறப்புடன் விளங்குவது தலைவியின் பேரழகாகும். இது உனது பிரிவினால் நலிதலுக்கு உட்படாமல் பார்ப்பாயாக.அதாவது அவளை மணந்து உனக்குச் சொந்தமாக்கிக் கொள்வதே முறையாகும். என்று தோழி தலைவனுக்குக் கூறுவதன் மூலம் தலைவி பிரிவுத்துயரினைத் தாங்கிக் கொள்ளமாட்டாள். அதனால் பெருந்துயர் அடைவாள், பேரழகை இழந்து விடுவாள் என்பவற்றை அறியமுடிகின்றது. அதனை

"**பழந்தமிழ் கொன்ற**
**புதுவலை பரதவர்**
**மேட்டுமணல்**
**அடைகரைக் கோட்டு**
**மீன்கொண்டி**
**மணங்கமிழ்**
**பாக்கத்துப்பகுக்கும்**



**வளங்கெழு தொண்டியன்ன இவள்**
**நலனே**"

என்ற அடிகளில் அவதானிக்க முடியும்.

*முலை முகஞ்செய்தன....'* என்ற பாடலில் கயமனார் செவிலித்தாய் கூற்றாக தலைவியின் நிலையைத் தெளிவுபடுத்துகிறார். "நீ இப்போது சிறுமி இல்லை, பெரியவளாகி விட்டாய் அதனால் வீட்டை விட்டு வெளியில் செல்லக்கூடாது' என்று செவிலித்தாய் கட்டுப்பாடுகளை விதிக்கின்றாள். ஆனால் அக்கட்டுப்பாடுகளை எல்லாம் அவள் மீறுகின்றாள். அறியாமல் புரிந்து வரும் ஒழுக்கக் கேட்டை செவிலித்தாய் அறிந்து விட்டாளே, ஆத்திரமடைந்து விட்டாளே என்று பயந்து வலையை கண்ட பெண்மான் போல பயந்து விரைந்து வீட்டைவிட்டு வெளியேறி விடுகின்றாள். இந்த நிலைகளை

"**தன் சிதைவு அறிதல் அஞ்சி**
**இன் சிலை**
**ஏறுவடை இனத்த நாறுயிர் நவ்வி**
**வலைகாண் பிணையிற் போகி....**"

என்ற அடிகளில் தெளிவாகக் காண முடியும்.

இவ்வாறாக அக நானூற்றுப் பாடல்கள் பலவற்றில் தலைவியின் நிலை , அவளது உள்ளத்து உணர்வுகள் என்பன உள்ளுறை உவமை முதலான இலக்கிய நயத்தோடு தலைவியின் கூற்றாக மட்டுமன்றி தலைவன், தோழி, செவிலித்தாய் கூற்றுக்களாகவும் புலவர்களால் நன்கு புலப்படுத்தப் பட்டுள்ளமை வியக்கவும் நயக்கவும் தக்கதாகும்.

---

## விசித்திர எழுத்தாளர்கள்..............

பிரபல ரஸ்ய எழுத்தாளர் " ஆண்ரன் செக்தூவ்" சிந்தித்துத் திட்டமிடாமல் ஒரே மூச்சில் கதையை எழுதி முடிப்பது வழக்கம். கதை எழுதும் போது அவர் பார்க்கும் எந்தப் பொருளும், எந்த நிகழ்ச்சியும் அவரது கதைப் பொருளாக அமைந்து விடுமாம்.

"பிரான்ஸீவா ஸாகன் " என்னும் எழுத்தாளர் எழுதும் முன் கதைப்பொருளைச் சிந்தித்துத் திட்டமிட்டு எழுத ஆரம்பிப்பாராம்.ஆனால் எழுத எழுத திட்டமிட்ட கதை திசை மாறி புதிய கற்பனைகள் உருப்பெறுமாம்" அதனால் கதையின் தொடக்கம் உருமாறி புதிய இறுதி வடிவம் பெற்று விடும். இந்தக் கடைசி நிமிட மாற்றங்கள் அவருடைய கதைகளுக்கு அலாதியான சுவையைத் தருமாம்.

"அன்ரோனி பார்ஸன்" என்ற துப்பறியும் நாவலாசிரியர் எழுத ஆரம்பித்தால் ஊன் உறக்கமின்றி நாவலை எழுதி முடிப்பார். எழுதி முடித்த பின் வயிறார உணவு உண்டு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து தூங்குவார்.

## நூல் வெளியீடு

வெற்றிவேலு ஜெயேந்திரன் எழுதிய 'பாரிஸ் குடும்பியின் ஊடாக" என்ற நூல் கடந்த சனிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டது.

"ஓவியம் வரையாத தூரிகை" (கவிதைகள்)

**ஆசிரியர்** - அனார்

**வெளியீடு** - மூன்றாவது, மனிதன் வெளியீட்டகம்

**விலை** - 100 ரூபா.

## புதுமைப் பித்தன் வாழ்க்கைக் குறிப்பு

**இயற்பெயர்** - வி.சொக்கலிங்கம் விருத்தாசலம்

**பிறப்பு-** 1906 சித்திரை 25 திருப்பாதிரிப் புலியூர்

**தாயார்** - பர்வதத்தம்மாள்

**மனைவி-** கமலா

**முதற் படைப்பு-** "குலோப்ஜான் காதல்" (1935 ஐப்பசி 18)

**மறைவு -** 1948 ஆனி 30

**இவரது படைப்புக்கள்** - சிறுகதை, நாடகம், கவிதை, நாவல், சினிமா எனப் பலவகை.

# சுனாமியின் அரசியல் மீதான அதிரடித் தாக்குதல்

இயற்கையன்னையின் வலுவும் சீற்றமும் எத்தகையதென்பது இன்னொருமுறை உணர்த்தப்பட்டுவிட்டது. மனிதர் அறிந்தது எவ்வளவு? அறியாதது எவ்வளவு? அல்லது அறியவேண்டியது எவ்வள வென்பதும் உணர்த்தப்பட்டாகிவிட் டது.

"எமனாய் வந்த கடலை எதிர் கொண்டபிறகு எவனைப் புகழ்வது கருணைக்கடலென்று" என்று மனிதரின் இழப்பின் வலியும் இயலாமையும் கடலன்னை மீதான கடும் சீற்றமாக பல்லாயிரக்கணக்கான கவிதை, கட்டுரைகளில் வடித்தாகி விட்டது.

எனினும் இறுதியில் கடலன்னை மடிமீதே வருவோம் மீண்டும் எழுவோம் என உண்மையும் உரைத்தாகி விட்டது.

இத்தகையதொரு சூழலிலே தான் இயற்கையன்னையின் முன்னே நாம் எளியவர்கள், சமமானவர்கள். எனவே இவ்வனர்த்தத்திற்கு வேறுபாடுகளை புறம் தள்ளிவிட்டு இணைந்து பணிசெய்வோம் என வேண்டுகை விடுக்கப்பட்டுள்ள நிலையில் சிங்களத்தரப்பு செய்வதென்ன? சர்வதேச உதவிகளை தடங்களின்றிப் பெறுவதற்காக தொடக்கத்தில் ஒத்துழைப்புக் குரலெழுப்பிய அம்மையார் இப்போது என்ன செய்கின்றார்? எப்போதும் போலவே சிங்கள பேரினவாதத்தின் **இருமாறா நிலைப் பாடுகளை எமது இணக்கக் குரலை பலவீனமாக கருதுவதும் தமக்கு எத்தகைய அழிவு நிலையேற்பட்டாலும் எவ்வழிகளைப் பயன்படுத்தியாவது தமிழ் மக்களை புறம் தள்ளுவதுமே தமது முன்னுரிமைச் செயற்பாடென்பதை** அவர் உணர்த்தியவண்ண மேயுள்ளார். போரால் அழிந்த பொருண்மியத்தை கட்டியெழுப்ப சுனாமி நிதியுதவிகளைப் பயன்படுத்தவும் சுனாமிக்குதவ வந்த படைகளை பாதுகாப்பற்ற நாட்டின் பாதுகாப்பினை பாதுகாக்க பயன்படுத்தவும், அவர் முனைகிறார்.

"சண்டே ஐலண்டின் 16/01ம் திகதி முற்பக்க செய்தி இவ்வா றுள்ளது. "திருமலைக் கடற்படையை கட்டியெழுப்ப இந்தியக்கடற்படை உதவி. திருமலை மாவட்டத்தின் ஏறத்தாழ 42 கிலோ மீற்றர் தூரத்திற்கு உடைத்தழிக்கப்பட்ட கடற்படைத் தளங்களைச் சீரமைக்க இந்தியக் கடற்படை உதவுகின்றது.

குறிப்பாக நிலாவெளியில் சிறிலங்கா கடற்படையின் தலைமையத்தினை கட்டியெழுப்ப இந்தியப் படை உதவிவகின்றது.

இந்தியக் கடற்படை பெருமளவு பொருட்களை இதற்காக "வழங்கி வருகின்றது. ரோம் பற்றி யெரியும்போது நீரோ மன்னன் இசைக் கருவி வாசித்த கதைதானிது".

சிறிலங்காவின் நிதியமைச்சர் மகிழ்ச்சியோடு பின்வருமாறு கூறினார். " பெருமளவிலான ரூபாயின் பெறுமதி தளம்பலின்றி உறுதியாகவுள்ளது.

"எனவே பொருட்களின் விலைகள் விரைவில் குறையும்" நிதியமைச்சரொருவருக்கு இதை விட மகிழ்ச்சியான செய்தி எதுவிருக்க முடியும்? இதற்கு என்ன காரணம்.?

சுனாமியின் பேரழிவை தொலைக்காட்சிகளில் கண்ணுற்ற மேற்குலகம் கதிகலங்கி கண்ணீர் விட்டதன் விளைவாக பெருமளவு நிதியுதவிகளை வாரிவழங்க முன் வந்தது.

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டும் அலை பாய்ந்து கொண்டிருந்த அம்மையாரின் குறுக்கு மூளை விபரீதமாக வேலை செய்தது.

முதல் வேலையாக புலிகளை நோக்கி நேசக்கரம் நீட்டுவதாக பாவனை செய்தார், தனக்கு மிக நெருங்கியோரை நியமித்து மூன்று புனர்வாழ்வு புனரமைப்புக் குழுக்களை உருவாக்கி வேகமாக சுனாமியின் அழிவிற்கு முகம் கொடுக்க ஆயத்த மாவதாக காட்டிக் கொண்டார்.

மக்கள் கருத்தினை ,கணக் கெடுக்காமலும், கிடைத்த விபரங்கள் பூரணமாகாத நிலையிலும் மதிப்பீட்டறிக்கையை வெளியிட்டும், அம்பாந்தோட்டையில் அடிக்கல் நாட்டியும் தன்னையொரு திறமையான வேகமான நிருவாகியாக உலகின் முன் காட்ட அவர் படும்பாடு சொல்லத் தரமன்று.

இப்போது சிறிலங்காவிற் குதவ முன்வரும் நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கையில் 1500 பில்லியன் டொலர்(1.5பில்லியன் டொலர்) பணத்திற்கான கோரிக்கையுள்ளது. இப்போது அடுத்த கோரிக்கை 3.5பில்லியன் டொலருக்கானது வெளிவிடப்பட்டு விட்டது.

சுனாமியால் அழிவுற்ற கரையோரப்பகுதியை அபிவிருத்திக்கான பகுதியாக பிரகடனப்படுத்தி இப்பகுதியின் புனர்வாழ்வு, புனரமைப் பிற்கான திட்டங்களை 13 துறைகளில் முறையாக மேற்கொள்ள தாம் ஆயத்தமென உதவிகோரும் அறிக்கை உரைக்கின்றது.

இத்தனை வேகமாக சிறிலங்கா அரசு இயங்கியதற்கான காரணமென்ன? 2004ஆம் ஆண்டு முடிவில் சிறிலங்காவின் சென்மதி நிலுவை குறிப்பாக எிபொருள் இறக்குமதியின் மேலதிக செலவின் காரணத்தால் மிகப் பாதகமான நிலையிலிருந்த வெளிநாட்டு சொத்தொதுக்கின் பெறுமதி 2.3 பில்லியன் டொலரிலிருந்து 1.7பில்லியன் டொலராக குறைந்தது.

வெளிநாட்டுக்கடன் 9 பில்லியன் டொலருக்கான பெருமளவு கடன் தவணைப்பணம் செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாறாக மூச்சு விட முடியாத நிலையிலிருந்த அம்மையாருக்கு இப்போது மூச்சுவிட நேரம் கிடைத்துள்ளது.

முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மூச்சையிழந்ததால் இது நேர்ந்தது. ஏனெனில் கடன் தவணைப் பணம் செலுத்த வேண்டிய காலவெல்லை காலம் குறிக்காமல் நீட்டப்பட்டுள்ளது.

இக் கட்டுரை எழுதப்படும் வேளையிலே இலங்கையின் இனச் சிக்கலின் தீர்வினைக் காண தலைப் பட்டிருக்கும் இணைத் தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், யப்பான், அமெரிக்கா, நோர்வே போன்றவை பிரானஸ்சில் கூடி உதவி வழங்குவது பற்றி முடிவெடுக்கின்றன.

உலகின் செல்வந்த G7 நாடுகள் கூடி சுனாமியால் பாதிப்புற்ற நாடுகளுக்கு உதவுவது பற்றி முடிவெடுக்கப்போகின்றன. இதுவரை நிதியுதவி வழங்கப்போவதாக கூறப்பட்ட வாக்குறுதிகளின் தொகை ஏறத்தாழ 15பில்லியன் டொலராகவுள்ளது.

இவற்றினை உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, யப்பான், சர்வதேச நாணய நிறுவனம் போன்ற ற்றின் வாக்குறுதிகள், இவற்றினைவிடவும் இருதரப்பு உதவிக ளெனப்படும் தனித் தனி நாடுகள் உதவிகள், தொடர்பாகவும் மிகுந்த நம்பிக்கையோடு சிறிலங்காவுள்ளது.

இக்கட்டத்திலேதான் தமிழ் மக்கள் சர்வதேசம் நோக்கி விடுதலைப்புலிகளின் வழி **தட்டிக்கழிக்க முடியாத, தார்மீக நியா யங்கள் நிரம்பிய பாரிய வினாவொன்றினை எழுப்புகின்றார்கள்** உலகின் மனச்சாட்சியினை உலுக்கும் வண்ணம் **மரபு சாராத முடிவொன்றினை** உலகம் எடுக்க தூண்டலாக இவ்வினாவமைகின்றது.



சுனாமியால் தமிழர் தாயகத்திலேற்பட்ட அழிவினையே தக்க முறையில் வெளிப்படுத்த விரும்பாத, புனர்வாழ்வு புனரமைப்பு திட்டங்களில் உரிய இடம் கொடுக்காத ஒரு பெரும்பான்மையின பாரபட்சமான அர சாங்கத்திற்கு எந்த அடிப்படையில் உலகம் உதவப் போகின்றது? சர்வதேச சமூகத்தின் ஒருங்கமைப்பின் முன்னே புலிகள் சவால் ஒன்றினை எழுப்பியுள்ளார்கள்.

இராணுவக் களத்தில் ஆயுதங்கள் உயர் விலைகொடுத்து போராடி தடைகள் தாண்டி புலிகள் முன்னேறிய போது சர்வதேச தலையீடு நேர்ந்தது.

அதனை அரசியல் களத்தில் அமைதி, பேச்சுவார்த்தை ஆயுதங்கள் வழி அறிவுத்திறனைப் பயன்படுத்தி தடைகள் தாண்ட முற்பட்டபோதே சுனாமிப் பேரழிவு நேர்ந்தது.

தேசியத் தலைவர் குறிப்பிட்டது போல முதலாவது சுனாமியான சிங்கள அரசின் அடக்குமுறையினைத் தகர்க்கும் வேளையில் இரண்டாவதான இயற்கை சுனாமிக்கு எவ்விதம் முகம் கொடுப்பது? **இரண்டாவது சுனாமிக்கு முகம் கொடுக்கும் அதே வேளையில் விடுதலைப் போராட்ட செங்குருதிக்கு பாதகமில்லாமல் அதனை எவ்வாறு கையாள்வது?** இதற்கான வழியையும் வழமை போலவே **தேசியத்தலைவர் தன் இயற்கையறிவால் இயல்பாகவே கண்டறிந்தார்.**

இப்புதிய வழிமுறைகளை

**- பாலகுமார் -**

புலிகள் கையாள்வதால் ஏற்பட்ட உடனடி விளைவுகளை இப்போது உலகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது.

தமிழர் தாயகத்தில் என்ன நடக்கின்றது. என்பதை இன்று எவரும் கண்கூடாகவே காணமுடியும். சுனாமிப் பேரழிவோடு இராணுவத்தினால் ஏற்பட்ட பேரழிவைக் கூடவே காணமுடியும்.

எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்தினை பலமிழக்கச் செய்ய உலகம் முயனறதோ அதே சொற்களையே புலிகள் வெளிப்படையாகவே பயன்படுத்துகின்றனர்.

வெறும் சொற்கள் என்றல்லாமல் கருத்தளவிலும் வெளிப்படைத்தன்மை, வகை கூறும் தன்மை, (Acountablity) பேண்தகு வளர்ச்சி, (Sustainable development) வலுப்படுத்தல் (Empowerment) மதிப்பிடும் கண்காணிப்பும் என நீளும் இன்றைய உலகின் கருத்தமைவிலும் புலிகள் உட்புகுந்துள்ளனர்.

இது சிங்களம் சற்றும் எதிர் பார்க்காத நிலைப்பாடு. சுனாமியால் வடகிழக்கிலேற்பட்ட பேரழிவை உலகின் கண்களிலிருந்து மறைக்க சிங்களம் எடுத்த முயற்சி இதனால் பயனளிக்காமல் போய்விட்டது.

அரசாங்கத்தால் திரட்டப் பட்ட புள்ளி விபரங்களையே புலிகள் ஆதாரமாகப் பயன்படுத்தியும் அதே வேளை சிங்களத்திலேற்பட்ட அழிவு களைக் குறைத்து மதிப்பிடாமலும் அதேவேளை வட் கிழக்கிலேற்பட்ட பேரழிவுகளை உலகின் முன் வைத் தும் புலிகள் உடனடி நியாயம் கோருகின்றனர்.

உழுத்துப்போன சிங்கள அரசின் நம்பகத்தன்மையற்ற நிர்வாக இயந்திரம் தயாரிக்கும் வெறும் புள்ளிவிபரங்களைக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கப்பட முடியாதவை. அதற்குப் பதிலாக ஆக்கபூர்வமான

01. அறிவியல் வழியிலமைந்த
02. மக்களை வலுப்படுத்தக் கூடிய.
03. சூழல் பேண் தகைமையிலான.
04. வெளிப்படைத் தன்மையிலான.
05. வகை கூறும் தன்மையுள்ள.

மேம்பாட்டுத் திட்டமொன் றை உலகின் முன்வைக்க அவர்கள் ஆயத்தமாகின்றனர்.

இதனை தமிழர் தாயகத் தில் நிறைவேற்ற ஒரு பொறி முறை யை புலிகள் வேண்டி நிற்கின்றனர். தொடரும் தமது இராச தந்திரப்போரின் தொடர்ச்சியாக இதனையும் இணைத்துள்ளனர். இலகு படுத்தப்பட்ட செயற்திறன் வாய்ந்த இவ்வமைப்பினை உலகம் எவ்விதம் மறுக்க முடியும்? அவ்விதம் மறுத் தால் அதன் விளைவென்ன? தென்னாசியப் பிராந்தியத்திலே மிக மோசமான பாதிப்புக்குள்ளான தமிழர் தாயகத்தில் இலங்கையின் 1900 கிலோமீற்றர் நீளமான கடற்கரையின் 1000கிலோமீற்றர் உள்ளது.

இக்கடற்கரையின் 800 கிலோ மீற்றர் பாதிப்பினை உலகம் எவ்விதம் கவனத்தில் கொள்ளாது விடமுடியும்? இலங்கையின் மொத்த அழிவில் 2/3 பகுதி தமிழர் தாயகமே தாங்கியுள்ளது என்பதை உலக வங்கியின் வதிவிடப் பிரதி நிதியான பீற்றர்கலோஸ்ட் சண்டே ஐலண்ட் (16.01.05)ஏற்றுள்ளார். ஆகவே எம் மக்கள் கேட்கின்றார்கள் **உலகே என்ன செய்யப் போகின்றாய்?**

இவ்விடத்தில்தான் புலிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிலைப்பாடுகளை முன் வைக்கின்றனர். சுனாமியால் தாக்கப்பட்ட எம் மக்களுக்குதவுவது என்பது வெறுமனே இரக்கம், கருணைகலந்த செயற்பா டாக மட்டும் இருக்க முடியாது.

அதாவது சுனாமிக்கு முன் னிருந்த வாழ்நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதாகவிருக்க முடியாது. அல்லது போர் தொடங்கிய 1970 களில் இருந்த நிலைக்குமல்ல. எல் லாருக்கும் கிடைத்த வாய்ப்பைப்போ லவே அவர்களுக்கும் தொடர்ந்து கிடைத்திருந்தால் இன்று என்ன நிலைக்கு வந்திருப்பார்களோ அந்த நிலையை கருத்தில் கொண்டே உதவித்திட்டங்கள் வரையப்பட வேண்டும்.

**இதுவரை எம்மக்களுக்கு மறுக்கப்பட்ட வாழ் நிலை தொடர்ந்தும் மறுக்கப் படுவதை உறுதிப்படுத்துவதாக சுனாமியின் விளைவால் வரும் உதவிகள் உறுதிப்படுத்துவதாக அமையுமானால் அது முறையற்றது.**

எது கிடைத்தாலும் சரியென இருந்து வாழ எம்மக்கள் ஆயத்தமாயில்லை.

சிறிலங்காவின் இரண்ட கமும் ஓரவஞ்சனையும் உலகறிந்தது. அதன் நிர்வாக இயந்திரத்தின் மெத்தனமும் ஒழுங்கீனமும் ஊழலும் உலகப் புகழ் பெற்றது. சிறிலங்கா அரசு ஒரு "தோற்றுப்போய்விட்ட அரசாங்கம்" ([aNjt caq;nfhl) என்றே இப்போது கருதப்படுகின்றது.

எனவே கிடைக்கப்போகும் வெளிநாட்டுதவிகளை முறையாக பங்கிட, தேவைகளை இனங்காண, அதற்கான திட்டங்களை தயாரிக்க அதனை நடைமுறையளவிட தனியான, சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டமைப்பிற்குள் அகப்படாது திறன் வாய்ந்த கட்டமைப்பே அவசியம் என்பதே புலிகள் நிலைப்பாடு.

இக் கருத்து இன்று இவ்வுலகின் கவனத்தினை ஈர்த்துள்ளது. மோதல்கள் நிரம்பிய நாடுகளில் மத்திய அரசுகள் மாற்றாந்தாய் போக்கிற்கு மாற்றாக இதனை ஒரு முன்மாதிரித் திட்டமாக பயன்படுத்த முடியுமா என உலக வங்கி போன்றவை ஆராய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவையே விடுதலைப்புலிகளின் புத்தாக்கத் திட்டமான போதும் இதற்கு அடிப்படைகளை எப்போதும் புலிகள் இறுகப்பற்றி நிற்பர்.

ஒன்று, இத்தகைய பேரிடர்களுக்கு உடனடி முகம் கொடுக்கும் இவ்விடைநிலையேற்பாடுகள் விடுதலைப் போராட்டத்தின் செல்நெறியில் பாதிப்பினை ஏற்படுத்தாது பாது காத்துக் கொள்ளல்.

உதாரணம், இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கு இவ்வேற்பாடு மாற்றாக அமையாது என்பதே புலிகளின் நிலை. இரண்டாவதும், மிக முக்கியமானதும் சுனாமியால் பெரும் பாதிப்புற்ற - பேராசிரியர் மௌனகுரு கூறிய கருத்தினை பிரதிபலிப்பது "இதற்கு முன்னமும் கடல் கோள்கள் வந்தன. சூறாவளியும் வீசியது.

அப்போதெல்லாம் யாரும் நிவாரணம் பற்றி அலட்டிக்கொள்ளவில்லை... அழிவை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணம் **எல்லாருள்ளும் உள்ளது.**

இதை வளர்க்கும் முயற்சியில் சகலரும் ஈடுபட வேண்டும் எவரையும் தங்கியிருப்பவர்களாக மாற்ற முயலாமல் ஒவ்வொருவரையும் அவர்கள் சொந்தக்காலில் நிற்க வைக்க வேண்டும்."

தேசியத் தலைவர் அண்மையில் பின்வருமாறு கூறினார். "எம் மக்களை **எவரில் தங்கியும் பிறரை எதிர்பார்த்தும் நிற்கும் மன நிலைக்கு** நாம் இட்டுச் செல்லாமல் அவர்கள் தங்களில் தாங்களே தங்கி நிற்க வைக்கவே நாம் முயலவேண்டும்" என்கிறார்.

**நன்றி-**
**(விடுதலைப் புலிகள்)**

# உலக செய்திகள்

## கொலம்பியா, வெனிசூலாவில் வெள்ளத்தினால் உயிரிழந்தோர் எண்பதாக உயர்வு

(பொகாடா)

கொலம்பியா, வெனிசூலா நாடுகளில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது.

கடந்த சில நாட்களாக கொலம்பியாவின் சன்டேன்டர், நோர்டி டி சன்டேன்டர் ஆகிய பகுதிகளில் கடும் புயல் காற்றுடன் மழை பெய்கின்றது. அதேபோல் வெனிசூலாவின் மெரிடா பகுதியிலும் கடும் மழை பெய்கிறது.

இதனால் பயங்கர வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஏராளமான வீடுகள் இடிந்து தரை மட்டமாகி விட்டன. நதியோரங்களில் கட்டப்பட்ட வீடுகள் புயல், மழைக்குத் தாங்காமல் இடிந்ததில் பலர் பலியாகி உள்ளனர். இதுவரை 80 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள்.

இது சாதாரண மழை அல்ல. கொலம்பியாவில் இதுவரை 33 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்தக் கால கட்டங்களில் இதுபோன்ற மழை இருக்காது என்று கொலம்பியா அவசரகால செயற்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெனிசூலாவிலும் ஐம்பது பேர் பலியாகி உள்ளனர். நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மீட்புப் பணிகள் தாமதமாகி வருகின்றன. கொலம்பியாவில் ஏற்பட்ட வெள்ளத்தால், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர்.

ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நாசமாகி உள்ளன. வெனிசூலாவில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

## கொல்கத்தா தேர்தல் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை



(கொல்கத்தா)

'திரிணமுல் காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.,வுக்கும் கூட்டணியில்லை. காங்கிரசுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை' என்று அக்கட்சியின் தகவல் தொடர்பாளர் பங்கஜ் பானர்ஜி தெளிவுபடுத்தினார்.

கோல்கட்டா மாநகராட்சிக்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ளது. அடுத்த ஆண்டு மேற்குவங்க சட்டசபை தேர்தல் வருகிறது. கடந்த லோக்சபா தேர்தலில் சிறுபான்மையினர் ஓட்டுகளை கணிசமாக திரிணமுல் இழந்து விட்டது. பா.ஜ.வுடன் அக்கட்சி கூட்டணி வைத்ததே இதற்கு முக்கிய காரணம் என கூறப்பட்டது.

இதுகுறித்து திரிணமுல் காங்கிரஸ் தகவல் தொடர்பாளர் பங்கஜ பானர்ஜி கூறுகையில் திரிணமுல் காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ., வுக்கும் கூட்டணியில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில் ஒரு உறுப்பினராக நாங்கள் இருக்கிறோம். மேற்கு வங்கத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேறு கட்சிகள் இல்லாததால் பா.ஜ.,வுடன் சேர்ந்து செயல்படுகிறோம். காங்கிரசுடன் கூட்டணி அமைக்கவும் வாய்ப்பில்லை என்றார்.

## ஆதரவான சாட்சிக்கு பிரமுகர்களை திரட்டுகிறார் ஜாக்சன்

(சான்டா மரியா)

தனக்கு ஆதரவாகச் சாட்சி சொல்லி முக்கிய பிரமுகர்களை அழைக்க மைக்கேல் ஜாக்சன் முடிவு செய்துள்ளார் என்று நீதிமன்றில் அவரது வக்கீல் கூறினார். பாப் உலகில் கொடி கட்டிப் பறக்கும் மைக்கேல் ஜாக்சன் மீது பாலியல் புகார்கள் உள்ளன. கலிபோர்னியா, நெவர்லேண்ட் பங்களாவில் தன்னுடன் வசித்த 13 வயது சிறுவனுடன், ஜாக்சன் தகாத உறவு வைத்துக் கொண்டதாகக் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணை கடந்த திங்கட்கிழமை மீண்டும் நடந்தது. ஜாக்சன் சார்பில் நீதிமன்றில் ஆஜரான வக்கீல் டாம் மெசெருவா கூறுகையில், தனக்கு ஆதரவாக முக்கிய பிரபலங்களை நீதிமன்றில் சாட்சி சொல்ல ஜாக்சன் அழைக்கிறார்.

கூடைப் பந்து விளையாட்டு வீரர் கோப் பிரயன்ட், நடிகை எலிசபெத் டெய்லர், நைட் நிகழ்ச்சி தொகுப்பாளர் ஜெலினோ உட்பட சிலரை சாட்சியாகத் தேர்ந்தெடுத்துள்ளார் என்றார். ஜாக்சன் தேர்ந்தெடுத்துள்ளவர்களில், செக்ஸ்புகார் கூறிய சிறுவன் மற்றும் அவனது குடும்பத்தாரும் அடங்குவர். அத்துடன் பிரபல பாடகர்கள் நிக்காரட்டர், ஸ்டீவ் வொண்டர், பேரிகிப், டயானாரோஸ், நகைச்சுவை நடிகர் கிறிஸ்டக்கர், 'டாக் ஷோ' நிகழ்ச்சி நடத்தும் லேரிகிங், மௌவுரி போவித் போன்றோரையும் சாட்சியாக அழைத்து ஜன்சல் திட்டமிட்டுள்ளார்.

## கால்கள் ஒட்டிய நிலையில் பேரு நாட்டில் அதிசயப் பெண் குழந்தை

(பெரு)

பேரு நாட்டில் கடற்கன்னி வடிவத்தில் கால்கள் ஒட்டிப் பிறந்த குழந்தையின் கால்களை பிரிக்க டாக்டர்கள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

பேரு நாட்டில் உள்ள மருத்துவமனை ஒன்றில் 9 மாதத்தில் பிறந்த பெண் குழந்தை ஒன்றுக்கு கால்கள் இரண்டும் ஒட்டிய நிலையில் உள்ளன. 'கடற்கன்னி' வடிவத்தில் உள்ள இக்குழந்தைக்கு மிலாக்ரஸ் என்று பெயரிடப்பட்டுள்ளன். 'மிலாக்ரஸ்' என்றால் ஸ்பானிஷ் மொழியில் அதிசயம் என்று பொருள்.

இந்த அதிசய குழந்தையின் இடுப்புக்கு மேல் உள்ள பாகங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. மற்ற குழந்தைகளைப் போல் துடிப்பாக உள்ளது. இடுப்புக்கு கீழ் உள்ள உறுப்புகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து இரண்டு கால்களும் ஒட்டிய நிலையில் மீனின் வால் போன்ற தோற்றத்தில் அமைந்துள்ளது. இதுபோன்று பிறக்கும் குழந்தைகள் சில மணி நேரங்களில் உயிரிழந்துவிடும் என்று டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிவத்தில் பிறந்து உலகில் தற்போது உயிரோடு இருக்கும் ஒரே நபர் அமெரிக்காவைச் சேர்ந்த டிபானி யார்க்ஸ் (வயது 16). இவரது கால்கள் அறுவைச் சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டு தற்போது உயிருடன் உள்ளார்.

அதிசய குழந்தை மிலாக்ரசின் கால்களை பிரித்து உயிர் பிழைக்க வைக்கும் முயற்சியில் டாக்டர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர். இரண்டு கால்களையும் பிரிப்பதற்கு அடுத்த மாதம் அறுவைச் சிகிச்சை நடைபெற உள்ளது. அதற்கு குழந்தையை தயார்படுத்தும் வகையில் ஆரம்பகட்ட அறுவை சிகிச்சை நேற்று முன்தினம் நடந்தது. இதில் குழந்தையின் கால்களுக்கு இடையில் மூன்று சிலிகான் பைகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த காயங்கள் குணமாவதற்கு ஆக்சிஜன் தெரபி கொடுக்கப்பட்டது. இந்த அறுவைச் சிகிச்சையை இலவசமாக செய்ய லிமா நகரில் உள்ள மருத்துவமனை முடிவு செய்துள்ளது.

## ஈரானில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தீவிபத்து 59 பேர் பலி!

(டெகரான்)

ஈரானில் மசூதி ஒன்றில் தொழுகை நடந்து கொண்டிருந்த போது ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 59 பேர் உயிரிழந்தனர். 200க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அவர்களில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஈரான் தலைநகர் டெகரானில் மெயின் பஜார் என்ற இடத்தின் அருகே ஆர்க் மசூதி உள்ளது. ஷியா பிரிவு முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் இம்மசூதியில் இன்னும் சில நாட்களில் அசூரா என்ற திருவிழா நடக்க உள்ளது.

இந்த மசூதியில் கடந்த திங்கட்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது திடீரென தீ பிடித்தது. தொழுகையில் இருந்த பலரும் தப்பிக்க முயன்று வெளியில் ஓடினர். ஆனாலும், தீ மளமளவென்று எல்லா இடங்களுக்கும் பரவியது.

இதில் சிக்கி 59 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பலரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மசூதியில் கடும் குளிரை தாங்கும்பொருட்டு ஹீட்டர் பொருத்தப்பட்டு இருந்தது. ஹீட்டரிலிருந்து கிளம்பிய வெப்பம், அங்கு போடப்பட்டிருந்த திரைச் சீலைகளில் பட்டு தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. தீவிபத்து குறித்து பொலிசார் கூறுகையில்:

'பெண்கள் பகுதியில்தான் முதலில் தீ பிடித்தது. பின்னர் ஆண்கள் பகுதிக்கும் பரவியது. தீ விபத்து ஏற்பட்டவுடன் மசூதிக்குள் இருந்த ஏராளமானோர் வெளியேறும்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலரும் காயமடைந்தனர்' என்றனர்.

## இந்தியாவுடன் எட்டு ஒப்பந்தங்களில் இத்தாலி கைச்சாத்து

(புதுடில்லி)


அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகை செய்யும் எட்டு ஒப்பந்தங்களில் இந்தியாவும், இத்தாலியும் நேற்று முன்தினம் கையெழுத்திட்டன.

இதுகுறித்து மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கபில்சிபல் கூறியதாவது:

மருத்துவ ஆராய்ச்சி, நிலப்பகுதியில் பேரழிவு எச்சரிக்கைக்கு செயற்கைக் கோளை பயன்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம் உட்பட பல்வேறு பணிகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்த ஒப்பந்தங்களில் வகை செய்யும்.

அறிவு சார்ந்த சொத்துரிமை செயல்பாடுகளை தொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்துவதே இவற்றின் முக்கிய நோக்கம்.

இயற்கை சீற்றங்களையும், பேரழிவுகளையும் கண்காணிக்க 'இஸ்ரோ' நிறுவனத்துடன் இத்தாலிய நிறுவனம் இணைந்து பணியாற்றும். இந்தியாவில் இருந்து ஆண்டுதோறும் 180 மாணவர்கள் இத்தாலி சென்று ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு உள்ளது. அதேபோல,



இத்தாலிய மாணவர்கள் 180 பேர் இங்கு ஆய்வுக்கு வருவார்கள்.

நரம்பியல் தகவல் துறையில் இருநாடுகளும் இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். உயர் மருத்துவ தொழில்நுட்பம், உயிரி தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து பணியாற்றவும் வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. இவ்வாறு கபில்சிபல் கூறினார்.

இத்தாலிய கல்வி மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகள் துறை அமைச்சர் இலிஜி மொரட்டி உடனிருந்தார்.

## காஸ்மீர் போக்குவரத்துக்கான நிபந்தனைகள் இந்தியாவில் தளர்வு

(ராய்ட்டர்)

பிளவுபட்ட காஸ்மீரில் இரு மருங்கிற்கும் நடத்தப்படும் பஸ் சேவையைப் பயன்படுத்துவோர் கடவுச் சீட்டுக்களைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிபந்தனையை கைவிட்ட போவதாக இந்திய அறிவித்துள்ளது.இந்த நிபந்தனை காரணமாக இந்திய காஸ்மீரில் சிறிநகருக்கும், பாகிஸ்தான் காஸ்மீரின் பயிற்சிலாபாத்துக்கும் இடையிலான பஸ் சேவைகளை ஆரம்பிக்க முடியாது இருந்தது. தமக்கிடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் பற்றி இரு தரப்பு அதிகாரிகள் நேற்று பாகிஸ்தானில் சந்தித்திருக்கின்றார்.

அதற்கு முன்னதாக இந்திய அரசாங்கத்தின் அறிவித்தல் வெளியாகியுள்ளது. இந்தியாவின் தீர்மானம் பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வமற்ற வழிகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் நேற்று கலந்துரையாடப்பட்டது.

## இடதுசாரி தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர் செனற் சபைக்கு தெரிவு

(ராய்ட்டர்)

முன்னாள் இடது சாரி தீவிரவாதி அமைப்பைச் சேர்ந்த ஒருவர் உருகுவே நாட்டுச் செனற் சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரீபவோ ஏமாரே தீதிரவாத அமைப்பின் தலைவரான ஜோம் முஜிக்கா பன்னிரெண்டு வருட காலங்களாக சிறைத்தண்டனையை அனுபவித்தவராவார்.

இவர் உருகுவே நாட்டின் செனற் சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அந்த நாட்டில் இடம் பெற்ற வாக்கெடுப்பில் முதல் தடவையாக இது சாரி கூட்டமைப்பு ஒன்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இந்தக் கூட்டமைப்பில் தீவிரவாத அமைப்பின் தலைவரான ஜோப் முஜிக்கா தலைமை தாங்கியிருந்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் செனற் சபைத் தலைவரா கமுஜிக்கா போட்டியிட இருப்பதனால் அவர் வெற்றி பெறும் சாத்தியக் கூறுகள் அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.


அவ்வாறு வெற்றி பெற்றால் உருகுவே நாட்டின் இடதுசாரி கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாகும் வரலாற்றுப் பூர்வமான முதல் சந்தர்ப்பமாகும்.

## இஸ்ரேல், பாலஸ்தீனர்கள் அறிவிப்பு

(ராய்ட்டர்)

மத்திய கிழக்கில் பல வருடகால முரண்பாடுகள், மற்றும் இரத்தக்களறிகளின் பின்னர், இஸ்ரேலிய, மற்றும் பாலஸ்தீன தலைவர்கள் யுத்த நிறுத்தமொன்றை அறிவித்திருக்கின்றனர்.அனைத்துப் பகுதிகளில் இருக்கும் பாலஸ்தீனியர்கள், மற்றும் இஸ்ரேலியர்களுக்கு எதிரான அனைத்து வன்செயல் நடவடிக்கைகளையும் இந்த யுத்த நிறுத்தம் தடை செய்யுமென்று

# கை விட்டனர் காலி மைதானத்தை பதிலாக வேறு மைதானம் நிர்மானிப்பு.



காலி மைதானத்தின் அன்றைய நிலை



காலி மைதானத்தின் இன்றைய நிலை.

(காலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி மைதானத்தை புதுப்பிக்கும் பணி கைவிடப்படுகிறது. மாற்று மைதானம் அமைக்கும் பணியில் இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகள் தீவிரமாக இறங்கி உள்ளனர்.

டிசம்பர். 26ல் ஏற்பட்ட சுனாமி பேரலையால் இலங்கை பெரும் சேதத்தை சந்தித்தது. இதில் புகழ்பெற்ற காலிமைதானமும் பலத்த சேதமடைந்தது. இலங்கை அணிக்கு ராசியான இந்த மைதானத்தை கடந்த வாரம் அவுஸ்திரேலிய சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் பார்வையிட்டார். இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகளும் இதை தொடர்ந்து பார்வையிட்ட வண்ணம் இருந்தனர். காலி மைதானத்தை மீண்டும் புதுப்பிப்பதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின் படி, போட்டி நடக்கும் மைதானம் வீரர்களுக்கு பாதுகாப்பு தரக்கூடியதாக இருக்க வேண்டும். அந்தவகையில் பார்த்தால், கடலுக்கு அருகாமையில் உள்ள காலி மைதானத்தில் மீண்டும் சுனாமி அச்சம் ஏற்பட்டால் என்ன செய்வது என ஐ.சி.சி., அச்சம் தெரிவிக்கிறது. சுனாமி வந்த நேரத்தில் 10 மீ., வரை இங்கு நீர் மட்டம் இருந்ததாக கூறப் படுகிறது. மீட்புப் பணிகளுக்கான செலவு ரூ.10 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிவாரண நிதி, ஐ.சி.சி., உதவிகளோடு இதை செய்து முடித்தாலும், மற்ற அணிகள் தைரியமாக வந்து விளையாட வேண்டுமே என்ற எண்ணமும் இலங்கை கிரிக்கெட் சபையைக் குழப்பிவருகிறது.

சகல வசதிகளோடு காலி மைதானத்தை புதுப்பிக்கும் எண்ணத்தை கைவிட்டு, மாற்றாக புதிய மைதானம் அமைக்கலாம் என்ற எண்ணத்திற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகள் வந்து விட்டனர். முதற் கட்டமாக, கொழும்பு தெற்கிலிருந்து 115 கி.மீ., தூரத்தில் ஒரு இடத்தை பார்வையிட்டு வந்துள்ளனர். விரைவில் இங்கு அல்லது வேறு இடத்தில் புதிய மைதானம் கட்டப்படும் என தெரிகிறது.

சர்வதேச போட்டிகள் நடக்க வாய்ப்பில்லை என்றாலும், உளளூர் லீக் போட்டிகள் இங்கு நடத்தப்படும் என மைதான பராமரிப்பாளர் வர்ணவீரா தெரிவித்தார்

## நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் பங்கேற்கிறார் ஹைடன்.

(சிட்னி)



நுரையீரல் வீக்கத்தால் அவதிபுற்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மேத்யூஹைடன் கொஞ்சம் உடம்பு தேறியிருக்கிறார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மேத்யூ ஹைடனுக்கு இரண்டு பிரச்சினைகள். சமீபகாலமாக கிரிக்கெட்டில் சொல்லிக் கொள்ளும் படி ஸ்கோர் செய்யவில்லை. அதை விடமுக்கியம் உடம்பும் சரியில்லை. நுரை யீரல் சவ்வு பகுதியில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டார் ஹைடன். இப்போது தேறி விட்டாராம். அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இன்று நியூசிலாந்து பயணம் செல்கிறது. இந்தத் தொடரில் பங்கேற்கிறார் ஹைடன்.





## தென்னாபிரிக்கா அணி வீரர்களில் திடீர் மாற்றம்.

(மும்பை)

தற்போது கறுப்பு, வெள்ளை வீரர்கள் என்ற இட ஒதுக்கீடு அடிப்படையில் தென்னாபிரிக்க அணி தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக திறமை இருந்தும் பலர் அணியில் இடம் பெற இயலாமல் போகிறது. இப்படி பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் கெவின் பீட்டர்சன். வெள்ளை இனத்தைச் சேர்ந்த இவர் வாய்ப்பு கிடைக்காததால், இங்கிலாந்து அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்திய ஒரு நாள் தொடரில் இவர் ஓட்டங்களை குவிக்க, தென்னாபிரிக்க அணியோ அற்பத வீரரை இழந்து தவித்தது.

குளூஸ்னர் போன்ற திறமைமிக்க வீரர்களையும் தென்னாபிரிக்க தேர்வாளர்கள் புறக்கணிக்கின்றனர். இது போன்ற தவறான தேர்வு அணியின் வளர்ச்சியை பாதிப்பதாக கூறுகிறார் தலைசிறந்த களத்தடுப்பாட்ட வீரரும், முன்னாள் தென்னாபிரிக்க வீரருமான ரோட்ஸ்.

நேற்று முன்தினம் மும்பை வந்த இவர் கூறியதாவது கிரிக்கெட் உலகில் தென்னாபிரிக்க அணி சிறந்து விளங்க வேண்டுமானால், வீரர்கள் தேர்வு முறையில் மாற்றம் வேண்டும். சீர்திருத்தம் என்ற பெயரில் வீரர்களை அடிக்கடி நீக்குவது சரியல்ல. திறமை இருந்தும் பீட்டர்சன், குளூஸ்னர்க்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.



தென்னாபிரிக்க அணிக்கான வீரர்கள் தேர்வில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என ஜோன்டி ரோட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக் கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

# மொத்த வியாபாரிகளால் உற்பத்தியாளர் பாதிப்பு.

(நமது நிருபர்)

கடற் பேரனர்த்தத்தைத் தொடர்ந்து அனைத்து விவசாயப் பொருட்களின் விலைகளும் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன. விவசாயிகளிடமிருந்து பொருட்களை விலைபேசி எடுத்துச் செல்லும் வியாபாரிகள் இலாபத்தை அதிகளவாக பெற்றுக் கொண்டு மீதியான தொகையையே விவசாயிகளுக்கு வழங்குகின்றனர்.

இதனால் விவசாயிகள் அதிகளவு பாதிக்கப்படுவதாகவும் விவசாயப் பொருட்களை அவர்களே சொந்தமாகச் சந்தைகளுக்குக் கொண்டு விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கும் இவர்கள் தாம் இப்படியாக வழமையாகச் செய்ய முடியாது என்றும் தமது தொழிலையும் கவனிக்க நேரம் போதாது உள்ளதாகவும் எவராவது மொத்த விற்பனை முகவர்கள் சிறந்த கொள்வனவுத் தொகையைச் செலுத்தி எமது விவசாயப் பொருட்களைப் பெற்றுச் சந்தைப்படுத்தினால் மிகவும் நன்றாக அமையும் எனவும் விவசாயச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே எதிர்காலத்தில் நுகர்வோர் மற்றும், உற்பத்தியாளர்கள் பாதிப்புறா வண்ணம் விவசாய மரக்கறி மற்றும் பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்வோர் கவனத்தில் கொள்ள வேண்டுமென தோட்டச் செய்கையாளர்கள் ஈழநாதமூடாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருது பாடசாலையை வேறு இடம் மாற்றுவதில் இழுபறி; எப்போது இதற்கு தீர்வு கிடைக்கும்.

(யூ.எல்.எம்.பைஸர்)

சாய்ந்தமருது ஆழிப் பேரலை காரணமாக முற்றாக அழிந்து போன ஒரு பாடசாலை மழ்ஹலுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயமாகும். இங்கு 1765 மாணவர்கள் கல்வி கற்றனர். இதில் 573 ஆண்களும் 632 பெண்களும் அடங்குவர். இவர்களுக்கு கற்பிக்க 52 ஆசிரியர்கள் இங்கு கடமையாற்றினர். வகுப்பு 1 தொடக்கம் 13 வரை கல்விப் போதனைகள் நடைபெற்றன. இது ஒரு சீ தரப் பாடசாலையாகும்.

ஆழிப் பேரலை காரணமாக இப்பாடசாலையில் கல்வி கற்ற 70 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். 100 மீற்றர் எல்லைக்குள் இப்பாடசாலை அமைந்துள்ளதனாலும் முற்றாகச் சேதமடைந்துள்ளதனாலும் முன்பிருந்த இடத்தில் இப்பாடசாலை அமைவதை பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் விரும்பவில்லை. மாற்றுக் காணியொன்றை சாய்ந்தமருது எல்லைக்குள் பெறுவது கடினமாக உள்ள நிலையில் மைதானம் மாத்திரமே மாற்று நிலம் என்றுள்ளது.

மைதானத்தின் ஒரு பகுதியை சாய்ந்தமருது வைத்தியசாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் இன்னுமொரு பகுதியில் பாடசாலையை அமைக்க பாடசாலை அபிவிருத்திச் சபை கோரியிருந்தும் ஒரு சில விளையாட்டுக் கழகங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் காரணமாக இந்நடவடிக்கை இழுபறி நிலையை அடைந்துள்ளது.

அண்மையில் ஒன்று கூடிய பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் ஏகமனதாக இப்பாடசாலையை மீண்டும் பழைய இடத்தில் நிர்மாணிக்கக்கூடாது எனத் தீர்மானித்தனர். இதற்கான காரணமாக பின்வரும் காரணிகள் முன்வைக்கப்பட்டன.

பாடசாலைக் காணி கரையிலிருந்து 100 மீற்றர் பிரதேசத்திற்குள் அடங்குகின்றது, பாடசாலை அதே இடத்தில் அமைந்தால் பெற்றோரால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாதுள்ளமை, மாணவர்கள் எப்போதும் சுனாமி அச்சம் கொண்டவர்களாகக் காணப்படுதல், ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு கடமை புரிய முன்வராத நிலை காணப்படுதல், திடீரென மாணவர்களின் வரவு குன்றி இடை விலகல் அதிகரிக்கும், அடிக்கடி ஏற்படும் சுனாமி அச்ச நிலை மற்றும் வதந்திகள் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படும்.

அடுத்த 10 வருடத்தினுள் இன்னுமொரு சுனாமி ஏற்படும் என்ற விஞ்ஞானிகளின் எதிர்வு கூறல், இங்கு வாழ்ந்த மக்கள் மேற்குப் புறமாக இடம் பெயர்ந்து வாழ்கின்றமை, மாற்று இடம் காணப்படுகின்றமை.

மாற்று இடமாக சாய்ந்தமருது தாமரை விளையாட்டு மைதானமே தீர்வாகக் காணப்பட்டது. விளையாட்டு மைதானமாக பாடசாலை வளவைப் பாவிக்க முடியும். அத்துடன் மைதானத்தின் ஒரு பகுதியே அதாவது 6 ஏக்கரே இத தேவைக்குப் பயன்படுவதால் மிகுதியுள்ள நிலத்தை மைதானமாகப் பாவிக்க முடியும்.

தற்போது சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்திலும் ஜீ.எம்.எம்.எஸ்.இலும் மாலை நேரப் பாடசாலையாக சாய்ந்தமருது மழ்ஹலுஸ் ஸம்ஸ் வித்தியாலயம் இயங்குகின்றது. இதன் காரணமாக இம் மூன்று பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிப்படைகின்றது.


இப்பிரச்சினைக்கு தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு கோரி பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் இப்பிரதேச அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் இப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.நிஜாமுதீன் மற்றும் மையோன் முஸ்தபா ஆகியோரைச் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறியும் எதுவித தீர்வும் கிட்டவில்லை.

அத்துடன் இது சம்பந்தமாக அமைச்சர் பேரியல் அஷ்ரப், பிரதேச செயலாளர் ஜூம் ஆப் பள்ளிவாயல் சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை, மாநகர ஆணையாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் இன்று வரை எதுவித தீர்வும் கிடைக்கவில்லை. இது தொடர்கதையாக முடிவின்றிச் செல்லுகின்றது. இதற்கு நியாயமான தீர்வு கிடைக்குமா? அல்லது மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளையுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## சிந்தனைக்கு!

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் தான் திலீபன் செய்திருக்கின்றான்.

தமிழீழத் தேசியத் தலைவர்



ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை
தொலைபேசி : 065-2226110,
batti @ eezhanatham .com
17.02.2005

# மீண்டும் தேர்தலா?

சிறிலங்கா ஆளும் தரப்புக்குள் மீண்டும் கட்சி முரண்பாடுகள் உருவாகியுள்ளன. ஆளும் தரப்பான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பிரதான அங்கம் வகிக்கும் ஜே. வி. பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் புகைந்து வந்த கருத்து முரண்பாடுகள் பற்றி எரியத் தொடங்கிவிட்டன.

இந்த நிலை உருவாகுமானால் தற்போதைய ஆட்சி உடைந்து பதவி கவிழும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளதாக அரசியல் நோககுனர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை கவிழ்ப்பதும் சமாதான முயற்சியை முடக்குவதும் பேரினவாத சக்திகளின் நோக்கமாக இருந்தது. ஜனாதிபதியின் சகோதரர் அனுராபண்டார நாயக்கா, மங்கள சரமவீர, சரத் அமுனுகம, ரெட்ண சிறி விக்கிரம நாயக்கா போன்ற சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஜே. வி. பியின் முக்கிய உயர் மட்டத் தலைவர்களுடன் பேரம் பேசும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தம்மை வளர்த்துக் கொள்வதில் அக்கறை கொண்டிருந்த ஜே. வி. பி சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு பேரம் பேசியதுடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டுக் கொண்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக உருவாக்கம் பெற்ற அதேகணம் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்கும் உலை வைக்கப்பட்டது.

ஈற்றில் ரணில் அரசு வீட்டுக்குச் செல்ல இனவாதத்தை தேர்தல் வாக்குறுதிகளாக்கிக் கொண்டு களமிறங்கியது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு.

தென்னிலங்கையில் இக்கட்சியினரின் சூடு பறக்கும் பிரசார மாயைக்குள் சிக்கிய தென்னிலங்கைச் சமூகம் கணிசமான வாக்குகளை இந்த கூட்டு முகாமிற்கு அள்ளி இறைத்தனர்.

தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பா வெற்றி பெறுவது என்பது புரியாத புதிராக இருந்தது. இறுதியில் அறுதிப் பெரும்பான்மைப் பலமில்லாத ஒரு ஆட்சியை தத்தி அடி வைக்கும் குழந்தையைப் போல் ஆட்சியமைக்க முடிந்தது.

சமாதானப்பேச்சு வார்த்தைகளை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்து ஆறு சுற்றுப் பேச்சுக்கள் சர்வதேச அரங்கில் நடந்திருந்தாலும் சர்வதேச சமூகம் அன்றய ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது கொண்டிருந்த நம்பிக்கையும் ரணிலுக்கு ஒரு புதுத் தெம்பூட்டியது. ''எப்படியும் மீண்டும் ஆட்சியமைப்போம்'' என்ற அந்த அயராத நம்பிக்கை தேர்தல் காலத்தில் தீவிர பிரசார நடவடிக்கைகளை வேகப்படுத்தாமைக்கு ஒரு காரணமாகும். இறுதியில் எதிர்பார்த்திராத தோல்வியை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படுத்தியது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்ததும் பிரதமர் நியமனத்திலிருந்து அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகாரங்களெல்லாம் அம்மணி நினைத்தமாதிரி தூக்கி கொடுக்க முடியாத நிர்ப்பந்தத்தை ஜே. வி. பி விதித்தது லக்ஸ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிக்க ஜனாதிபதி விரும்பினார். தனது முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் கதிர்மாருக்கு பிரமதர் பதவியை வழங்கினால் தமது ஆளுகைக்குள் பொத்தி பதவியை வைத்திருப்பது ஜனாதிபதின் நோக்கமாக இருந்தது.

எனினும் இனவாதத்தில் ஊறித்திரிந்த ஜே. வி. பி அதனை விரும்பவில்லை. சிறுபான்மையினத்தைச் சேர்ந்த தமிழன் ஒருவன் பிரதமராக வரக்கூடாது என கண்டனம் தெரிவித்ததை அடுத்து ஜே. வி. பியின் ஆதரவுடன் மகிந்தராஜ பக்ச பிரதமரானார்.

அதன் பின்னர் காணி அபிவிருத்தி மகாவலி அமைச்சு பதவியை வழங்குவதிலிருந்து இற்றைவரை ஜனாதிபதிக்கும் ஜே. வி. பியின் உயர் மட்ட தலைவர்களுக்குமிடையே பனிப்போர் நடந்தே வந்துள்ளது.

தற்போது உச்சக்கட்டமடைந்துள்ளது. நிலைமைகளை அவதானிக்கும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆயுள் குறுகியதுதான் என நோக்க இடமுண்டு.

இந்நிலையில் பிரதான ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்கா விடின் மீண்டும் ஒரு தேர்தல் வரக்கூடிய சாத்தியமுள்ளது.

# தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்பு

(சர்வேஸ்வரன்)

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை அம்பாறை மாவட்ட தமிழீழ மருத்துவசேவைப் பொறுப்பாளர் தினேஸ் தலைமையில் திருக்கோவில் தங்கவேலாயுதபுரத்தில் நேற்று காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட படையணித்தளபதி மதுர கவி தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றினார். ஈகைச் சுடரினை உதவி அரச அதிபர் தவராஜா அவர்களும், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர் மாதவி அவர்களும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தலைமையுரையினை அம்பாறை மாவட்ட மகளீர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா ஆற்றினார்.அமபாறை மாவட்ட சிறப்புத்தளபதி ஜனார்த்தனன் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். பெயர்ப் பலகையினை தமிழீழ கள மருத்துவப் பொறுப்பாளர் மனோஜ் அவர்கள் திறந்து வைத்தார். சிறப்புரையினை அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜனார்த்தனன் வழங்கினார். அதிதிகளாக சுகாதார வைத்திய அதிகாரி சுலோசனா, பிரதேச செயலாளர் தவராசா, உடும்பன் குளக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் நிலாகரன், அம்பாறை மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் இதயன், திலீபன் மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் நாகேஸ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கரையோரப்பகுதிக் காணிகள் படையினரால் சுவீகரிப்பு

(ஆ. கந்தசாமி)

கடற்கரையோரங்களிலிருந்து 100மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளுள் குடியிருப்புக்களையோ கட்டடங்களையோ அமைக்கக் கூடாது என்ற புதிய சட்டத்தை யாழ் வடமராட்சியில் அமுல் செய்யும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக யாழ் வடமராட்சிப்பகுதியில் கடலோரங்களிலிருந்து 100 மீற்றர் தூரத்தை வரையறை செய்து அவற்றுக்கு எல்லைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடு படத் தொடங்கியுள்ளனர்.

இதனால் இப்பகுதிக் கடற் கரையோரங்களில் வீடமைத்து வாழ்ந்து வந்த மக்கள் தற்போது நிரந்தரமாகவே இடம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க அரசின் 100 மீற்றர் புதியசட்ட நடைமுறை மூலம் பொதுமக்களை கடற் கரையோரங்களில் வீடமைக்கத் தடை செய்துள்ள படையினர் பொது மக்களின் காணிகளையும தமது பாதுகாப்பு வலய நடை முறைக்குள் சுவீகரிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரின் நடவடிக்கைகளால் பொது மக்களது பாதுகாப்பு வலயங்களுள் உள்ளீர்க்கப்படும் அபாயம் தோன்றியுள்ளமை குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை முதலாம் குறிச்சிக்கு நிரந்தர கிராமசேவகர் நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைக்குடி முதலாம் குறிச்சிக்கு நிரந்தர கிராமசேவகர் ஒருவரை நியமித்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸாரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், மயோன் முஸ்தபா ஆகியோருக்கும் மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

356 குடும்பத்தினர் வசிக்கும் இப்பிரதேசத்தில் நிரந்தர கிராம அலுவலர் ஒருவர் இல்லாததால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள் சீராகக் கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இங்கு கடமையாற்றும் கிராமசேவகர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்து கொடுக்கவேண்டிய அவசர அத்தியாவசிய உதவிகளையும் நிவாரணப் பணிகளையும் முறையாக மேற்கொள்ளத் தவறிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை முதலாம் குறிச்சிக்கென நிரந்தர கிராமசேவகர் ஒருவரை உடனடியாக நியமிப்பதன் மூலமே நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளையும் அன்றாட அலுவல்களையும் சீராக மேற்கொள்ள முடியும் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனர்த்த முகாமைத்துவ மையம்

(அஸ்லம்.எஸ்.மௌலானா)

கல்முனை ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

இந்நிலையம் சுனாமியால் மிகக்கடுமையாகப் பேரழிவடைந்துள்ள அம்பாறை மாவட்டத்தின் புனர்நிர்மானப் பணிகளில் பங்காளராகவும் செயற்படும் என அறிவிக்கப்படுகிறது.

இப்பணிகளுக்காகப் பங்களிப்புச் செய்ய விரும்புவோர் தமது நன்கொடைகளை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயருக்கு காசோலைகளை அனுப்பி வைக்க முடியும் என பல்கலைக் கழக பதில் பதிவாளர் எம்.தையூப் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக உபவேந்தருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# கொலை மிரட்டல் கொள்ளை சம்பவம்

(நமது நிருபர்)

தேச விரோத கும்பல்களால் வந்தாறுமூலை ,மாவடிவேம்பு, கொம்மாதுறை, ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இரவு 7.00 மணிக்கு பின்னர் மோட்டார் சைக்கிள்கள் பணம், நகைகள் போன்ற பெறுமதி மிக்க பொருட்கள் அண்மையில் கொள்ளையிடப்பட்டதுடன் சிலர் கொலை அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது போன்ற சம்பவங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறுவதற்கு இராணுவமே முழுப் பொறுபையுமேற்க வேண்டும் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# நெதர்லாந்து எதிர்க்கட்சி உறுப்பினர் கொக்கட்டிச்சோலையில் புலிகளை சந்தித்தார்

(நமது நிருபர்)

நெதர்லாந்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடுதலைப்புலிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

செவ்வாயன்று கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், துணைஅரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெதர்லாந்து எதிர்க்கட்சித் தலைவர் மட்டு.அம்பாறை மாவட்டத்தின் மீள்கட்டுமானப் பணி, வடக்குக் கிழக்கிற்கு கிடைக்கின்ற நிதி உதவிகள் தொடர்பாகவும் விடுதலைப். புலிகளிடம் கேட்டறிந்து கொண்டார்



மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழு பிரதிநிதிகள் திங்கட்கிழமை கொக்கட்டிச்சோலையில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறப்பாளர் இளந்திரையன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய போது எடுத்த படம்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# கொழும்புக்கு ஒரு எல்லை சாய்ந்தமருதுக்கு ஒரு எல்லையா?

## நாளை பள்ளிவாயல்கள் முன் பேரணி

(சாய்ந்தமருது நிருபர்)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் ஒரு பேரிடியாக அரசின் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் எல்லைகள் என்ற கரையோரப் பாதுகாப்புத் திட்டம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வெல்லைகள் கிழக்கிற்கு மட்டுந்தானா? அல்லது தெற்கிற்குமா? எனக் கேள்வியெழுப்பியுள்ள துண்டுப் பிரசுரமொன்று கரையோர முஸ்லிம் பிரதேசங்களில் வினியோகிக்கப்பட்டுள்ளது.

"கரையோரப் பாதுகாப்புத் திட்டம் எமது வாழ்வுரிமையைப் பறிக்கின்றது" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் செய்ய வேண்டிய உதவிகள் எவ்வளவோ இருந்தும் வெளிநாடுகள் கோடிக் கணக்கில் உதவிகள் புரிந்தும் மக்களுக்குத் தேவையான மீட்புப் பணிகள், நிவாரணப் பணிகள் மற்றும் தற்காலிய கூடாரங்கள் அமைக்கும் பணிகள் மந்த கதியில் நடக்கும் நேரத்தில் கரையோரப் பாதுகாப்புத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த அரசு மேற்கொள்ளும் கரிசனையானது பல சந்தேகங்களை கரையோர மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

மேலும் பல சந்தேகத்துடனான கேள்விகளையும் இத்துண்டுப் பிரசுரம் எழுப்பியுள்ளது. அவையாவன "கொழும்பிற்கு ஒரு எல்லை சாய்ந்தமருதிற்கு ஒரு எல்லையா? கொள்ளுப்பிட்டி உல்லாச ஹோட்டலுக்கு ஒரு திட்டம் ஹம்பாந்தோட்டைக்கு ஒரு திட்டமா? இத்திட்டம் அவசர அவசரமாக நடைமுறைப்படுத்த அரசு எத்தனிக்கும் நடவடிக்கையில் உள்ள உள்நோக்கம் என்ன?

நாளைவெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின்னர் அனைத்து கரையோர முஸ்லிம் பள்ளிவாயல்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தவும் இதன் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. "சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள்" எனும் பெயரில் இது வெளியிடப்பட்டுள்ளது.

# பாடசாலை மைய அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றி ஆலோசனை

(வி.ரி.சகாதேவராசா)

இலங்கை பாடசாலை கலைதிட்டத்தில் பாடசாலை மைய அனர்த்த அபாய முகாமைத்துவம் (School Basaster Risk Managemnt) தொடர்பான கருத்துக்களை சேர்ப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய கல்வி நிறுவனமும், ஜிரிஇசட், ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து கலந்துரையாடலை நடாத்தியது. கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் விடுத்த வேண்டுகோளின் பேரில் மேற்படி அமர்வு இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்கள் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களை எதிர் கொண்டு தம்மைத்தாமே பாதுகாப்பது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இவ்வமர்வின் எதிர்பார்ப்பாகும்.

ஜிரிஇசட் அடிப்படைக் கல்விப் பிரிவுத் தலைவர் கலாநிதி மிக்கேல் ஹேர்த் அனர்த்தம் தொடர்பான சமர்ப்பணத்தை சபையில் சமர்ப்பித்துப் பேசினார்.

இயற்கை அனர்த்தம் பற்றி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதிலிருந்து தப்புவது தொடர்பான உபாயங்களை கலைத்திட்டத்தின் ஊடாக வழங்குவது சிறப்பானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

இருக்கின்ற கலைத்திட்டத்தில் சேர்ப்பது பற்றி கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

# கிழக்கில் பஸ் ஊழியர்கள் வேலை பகிஸ்கரிப்பு சம்மாந்துறை டிப்போ ஊழியர் உண்ணா விரதம்

(விரி.சகாதேவராசா)

கிழக்கின் 14 பஸ் டிப்போக்களிலும் நேற்று புதன்கிழமை வேலைப் பகிஸ்கரிப்பு இடம் பெற்றது.

சம்மாந்துறை பஸ் டிப்போ முன்னால் மூவின ஊழியர்களும் பதாதைகள் சகிதம் உண் ணாவிரதம் இருந்தனர். பலரது வே ண்டு கோளின் பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் உண்ணாவிரதம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

"அரசே, கொத்தணி பஸ் ஊழியர்களை புறக்கணிக்காதே!, "அமைச்சரே உம்மால் முடியாவிட்டால் வேறொருவரிடம் அமைச் சை ஒப்படை", "மூன்று நாட்களில் தீர்வு தரப்படாவிடின் போராட்டம் தொடரும்" என்றெல்லாம் பாதைகளில் எழுதப்பட்டிருந்தது.

போக்குவரத்து ஸ்தம்பித நிலையடைந்திருந்ததை இப்பகுதிகளில் காணக்கூடியதாய் இருக்கின்றது.

# மணல்பிட்டி பஸ்சேவை இல்லாததால் மக்கள் விசனம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி சாலை பணியாளர்கள் நேற்று நடத்திய பணிப்புறக்கணிப்பு காரணமாக படுவான்கரை மக்கள் போக்கு வரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்தனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து மணற்பிட்டி சேவை என கொக்கட்டிச்சோலைக்கான ஒரே ஒரு பஸ்சேவையே நடாத்தப்படுகின்றது. தினமும் மூன்று தடவை மாத்திரம் நடாத்தப்படும் இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றர்.

# யாழ்ப்பாணத்தில் நேற்றும் கண்டனப் பேரணி கண்காணிப்புக் குழுவிடம் மனு கையளிப்பு

(ஆ.கந்தசாமி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட்ட நான்கு போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், சுனாமி அனர்த்த புனர்வாழ்வுப் பணிகளை தமிழர் தாயகப் பகுதிகளுக்கும் பகிர்ந்தளித்துப் பயன்படுத்துவதற்கென புலிகளால் முன் வைக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பு யோசனைகளை அரசு ஏற்காது இழுத்தடித்து வருகின்றமையைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட கல்விச் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இப்போராட்டத்தில் கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், மற்றும் அதிகாரிகள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கோவில் வீதியில் உள்ள இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் வரைச் சென்ற இப்பேரணியின் முடிவில் கண்காணிப்புக் குழுவின் யாழ் மாவட்ட தலைவர் றொணி பிறஸ்ஸனிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

இதில் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ் மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம் என பல்வேறுபட்ட கல்விசார் அமைப்புக்களும் கலந்து கொண்டு தமது ஆட்சேப மனுக்களைக் கையளித்தனர்.

# மரணப்பதிவை பெற்றுக் கொடுப்பதில் மனித உரிமை ஆணைக்குழு உதவி!

(காரைதீவு நிருபர்)

அக்கரைப்பற்றுப் பிராந்தியத்தில் சுனாமியால் சிக்கியிறந்தவர்களுக்கான மரணப் பதிவைப் பெற்றுக் கொடுப்பதில் மனித உரிமை ஆணைக்குழு உதவியளித்து வருகிறது.

கல்முனைப் பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் இரா.மனோகரன், ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான இணைப்பாளர் ந.கபிலன் ஆகியோர் பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்புப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களிடம் மரணப் பதிவு பெறுவது தொடர்பான விழிப்புணர்ச்சியை வழங்கி வருகின்றனர்.

மேற்படி 03 பிரதேச செயலகங்களுக்கு மரணப் பதிவைப் பெறுவதற்கான சத்திய ஓலை விண்ணப்பப்படிவங்களை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

மரணப் பதிவு தேவைப்படும் மக்கள் பிரதேச செயலகங்களில் இன்று மேற்படி விண்ணப்பங்களைப் பெற்று சமாதான நீதிவானின் ஒப்பம் பெற்று அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொத்துவில் பிரிவில் 150 பேரும் திருக்கோவில் பிரிவில் 470 பேரும் ஆலையடிவேம்புப் பிரிவில் 147 பேரும் சுனாமியால் பலியாகியிருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

---

**அலுவலக........**

பட்டு அமைச்சர் தாக்கியதாக இந்த முறைப்பாட்டு கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது குறித்து ஊழியர்கள் கருத்துக் கூறுகையில்: இதுவரை காலமும் அமைச்சு ஒன்றின் ஊழியர் அமைச்சராலோ அல்லது அரசியல்வாதி ஒருவராலோ தாக்கப்பட்டதை தாம் அறிந்திருக்கவில்லை. இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையானது ஜனநாயக வரம்புகளை மீறுவது மாத்திரமல்லாமல், மனித உரிமை மீறலுமாகும். சாதாரணமாக அரச ஊழியர் ஒருவர் தவறு செய்வாராக இருந்தால் அதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதே நடைமுறையாகும்.

எனினும் இதனை மறுக்கும் வகையில் அமைச்சர் நடந்து கொண்டமையால் தமக்கு பயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது உரிய இடமாற்றங்களை வழங்கவேண்டும் என அமைச்சின் செயலரிடம் கோரியுள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கோரிக்கை கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பொது நிர்வாக அமைச்சர் உட்பட்டோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**கொக்கட்டிச்சோலையிலி.....**

இவர்கள் பயணித்த உலங்கு வானூர்தி பிற்பகல் 2 மணிக்கு கொக்கட்டிச்சோலை விளையாட்டு மைதானத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மாவடிமுன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் சம்பூர் மகாவித்தியாலய மைதானத்தை சென்றடைந்த இந்தக் குழுவினரை திருகோணமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் திருகோணமலை அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் , ஆகியோர் வரவேற்றனர்.

---

**ஜனாதிபதி ........**

485 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதில் 11 ஆயிரத்து 485 வீடுகள் பகுதிகளாக சேதமடைந்துள்ளன. மண்முனை வடக்கு செயலகப்பிரிவில் அதிகமாக 9470 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதற்கிடையில் ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சேபித்துள்ளது. இந்த நிலையில் தமது ஆட்சேபத்திற்கான காரணத்தை கூறும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயாநந்தமூர்த்தி தெரிவிக்கையில் ஜனாதிபதி அரசியல் பிரசாரம் நடத்துவதற்காகவே வருவதால் அதனை தாம் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி வீடுகளுக்கான அடிக்கல்நாட்டும் வைபவத்தில் பங்கு கொள்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் பின்னர் எத்தனை வீடுகள் அமைக்கப்படப் போகின்றன.

எத்தனை பேர் மீள்குடியமர்த்தப்படப்போகிறார்கள் என்ற தகவல்கள் யாவும் வெளிப்படுத்தப்படவில்லை எனவும் ஜெயானந்தமூர்த்தி குறிப்பிட்டார்.

---

**அம்பாறை ........**

தில் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வேளாண்மையிலிருந்து கதிர்பறியும் நேரத்தில் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வயல்களை அறுவடை செய்யாது விவசாயிகள் அப்படியே விட்டுள்ளனர். இதனால் படுவான்கரைப் பிரதேசத்தில் இம்முறை விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

இதேவேளை அறுவடை காலமாகிய தற்போது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அறுவடை ஆட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஏனெனில் அதிகமானோர் தற்போது நலன்புரி நிலையங்களிலே தங்கியிருக்கின்றனர். இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்பட்டாலும் போதியளவு இயந்திரங்கள் இன்மையால் உரிய வேளையில் அறுவடை செய்ய முடியாது நட்டம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு அனர்த்தத்தின் பின்பு உப உணவுச் செய்கையும், வெற்றிலைச் செய்கையும் பாதிப்புக்குள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

**பேபி 81......**

நன்றி கூறிக் கொண் டே இருந்தார்.

வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள், மற்றும் நீதிமன்ற அங்கத்தவர்கள உட்பட அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களுக்கும் நன்றி தெரிவித்த பெற்றோர், அங்கிருந்து குழந்தையுடன் அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று வணக்கம் செய்த பின்னர், தாம் தங்கியிருந்த பாண்டிருப்பிலுள்ள உறவினரின் இல்லத்திற்கு குழந்தையுடன் சென்றனர்.

வைத்தியர் கோபால் முகுந்தன், அபிலாசின் தந்தையுடன் பேசுகையில், குழந்தை சரியான பெற்றோரிடம் செல்ல வேண்டுமென்ற ஒரே விருப்பில் மட்டுமே நாம் அனைத்து விடயங்களிலும் ஈடுபட்டோம். உங்களிடம் உங்களது குழந்தை கிடைத்ததில் எமக்கு மிகவும் மகிழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே ஊடகங்கள் தெரிவித்தது போன்று இரு பெற்றோர் இந்தக் குழந்தைக்கு உரிமை கொண்டாடினார்கள் என்பது தவறான செய்தியென்றும், ஆரம்பத்தில் பல பெற்றோர்கள் குழந்தை தங்களுடையது என்று குறிப்பிட்டாலும் பின்னர், இந்தப் பெற்றோர் மட்டுமே தொடர்ந்து உரிமை கோரியதுடன், சட்டரீதியாகவும் நடவடிக்கைகளை எடுத்ததாக வைத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 17.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.